755

உ

மனமோகினி

ஓர் மாதாந்தச் சஞ்சிகை

(முதல்தர நாவல்கள்)

தொகுதி 2.] 1923௵ மே௴ 1௳ [பகுதி 4

இதில் வெளிவரும் "பவளத்தீவு" அல்லது
"குடும்பசாபம்" யென்னும் நாவல்

ஸ்ரீமான்
ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்களால்
இயற்றப்பட்டது

3 - AUG 1923
MADRAS

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியாரால்
பிரசுரிக்கப்பட்டது

1923

[காபிரைட்.

JC
N22MM
N23.2.4.
186489

மனமோகினி

ஓர் மாதாந்த சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள். அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந் தர வேண்டியதா யிருத்தலின், அதில் ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதா யிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று இதனை 1922௵ பிப்ரவரிமீ 1௳ முதல் ஆரம்பித்தோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்கொரு முறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். ஒரு வருஷத்துக்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்கள் பைண்டாகிவிடும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேகம் நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" என்னும் நாவல் முதலில் வெளியாகி முடிந்தது. இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ. 2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. 1923௵ மார்ச்சுமீ 1௳ முதல் இதே நூலாசிரியரால் வரையப்பட்ட "பவழத்தீவு" அல்லது "குடும்ப சாபம்" என்ற மிக்க அதிசயமான நாவல் தொடங்கி, வெளியாகிவரும். அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வெளியாகியுள்ள சஞ்சிகைகளை வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

☞ முன் பணம் அனுப்பினால் 2—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணாவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இது அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. அவருடைய நாவலின் போக்கு எல்லோருக்குந் தெரிந்திருக்குமாகையால் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

மானேஜர்: "ஆனந்த நிலையம்"

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதராஸ்.

காரணமுமின்றிக் கீழே விழும்போதெல்லாம் தமது குடும்பத்தில், ஏதேனும் நல்லதோ பொல்லாதோ, ஒரு விசேஷ சம்பவம் நேரிடுவது அனுபவமான விஷயம். ஆகையால் இப்போது இப்படம் விழுந்ததால் இச்சமயம் ஒரு விசேஷமும் சம்பவியாவிடினும் இனி எதிர் காலத்தில் என்ன சம்பவம் நேரிடுமோவென்று அவர் மனதிற்குப் பெரிய வியாகூலமாக விருந்தது.

14-வது அத்தியாயம்.

பவழத்தீவில் வயோதிகனுடைய துக்க விமோசனம்—குசலாம்பாளும் வாலிபனும் மறுபடி சந்தித்தல்—மோசக்கிழவியும் வாலிபனும்—மர்ம இடம்.

நவீனபுரியில் இப்போது மாரிகாலம். ஆனல் அங்கிருந்து ஆயிரக்கணக்கான மயில்கள் தூரத்திலிருக்கும் பவழத்தீவில் இப்போது வசந்தகாலம். நவீன புரியில் நமது ஆத்மநாதம் பிரபுவும் அவர்மனைவியும் முன் அத்தியாயத்தில் கூறியபடி தோட்டத்தில் பேசிக்கொண்டிருந்தபோது இரவு ஏழுமணி யிருக்கும். அதேவேளையில் பவழத்தீவில் பகல் பனிரெண்டு மணி யிருக்கும்.

இவர்கள் மாளிகையின் தோட்டத்தில் உலவிக் கொண்டிருக்கும் அதே வேளையில் பவழத்தீவிலிருக்கும் நமது வயோதிகனும் அத்தீவில் உலவிக்கொண்டிருக்கிறன். ஆனல் அவன் முகத்தில் முன் இருந்த ஆழ்ந்த விலயான விசாரம் இப்போதில்லை, நாம் முன்பு இக்கதையின் தொடக்கத்தில் அவனைப்பற்றிக்கூறி இப்போது பதினெட்டு வருடங்களாயின. இப்போது அவன் உரோமங்களெல்லாம் வெள்ளிக்கம்பிகள் போல் பூரணமாய்

3 AUG 1923
186489

வெளுத்து விட்டன. அவன் தேகம் வளைந்து விட்டது. கால்களும் வளைந்து சற்று தள்ளாடின. ஆனால் வெயில் அவ்வளவு உஷ்ணமாயிருப்பினும் அவன் முகம் வதங்கிச் சுருங்கவில்லை. முன்போல் அவன் தேகம் நடுக்கங்கொள்ள வில்லை.

அக்கிழவன் முன்பு சென்றபடி கடலோரத்தில் குகையிருக்கும் அதே விடத்திற்குச்சென்றான். ஆனால் முன் போல் அங்கிருந்த இலைகளைப் பறிக்கவில்லை. ஆனால் நேராய் அக்குகைக்குள் சென்றான். இச்சமயம் நாமும் அவன் கூடவேசென்று பார்ப்போம். அச்சுரங்கத்தில் வழி ஏறக்குறையச் செங்குத்தாய்க் கீழ் நோக்கிச்சென்றது. கீழே ஒரு சுனை யிருந்தது. அச்சுனையில் தெளிவான தண்ணீர் இருந்தது. அங்கு இருபக்கங்களும் சாம்பல் நிறம் பொருந்திய பாறைகளாயிருந்தன. வயோதிகன் அங்கு சென்றதும் பாறையில் சொருகிவைத்திருந்த ஒரு தீவட்டியையும், ஒரு இரும்புத்துண்டு, மிருதுவான தேங்காய்நார், ஓர் வெள்ளைக்கல் முதலிய தீயுண்டாக்கும் கருவிகளையும் எடுத்தான். அப்பந்தம் பஞ்சுபோன்ற தேங்காய் நாரினால் செய்யப்பட்டு தேங்காய் எண்ணெயில் திளைக்கப்பட்டிருந்தது. அந்த விடத்தில் நடுப்பகலி லுங்கூட இருள் சூழ்ந்திருந்ததாயினும், நமது வயோதி கன் பழக்கத்தால் அதன் ஒவ்வொரு அங்குலங்கத்தையும் நன்றாய் அறிந்தவனா யிருந்தான்.

வயோதிகன் சக்கிமுக்கியால் நெருப்புண்டாக்கிப் பந்தத்தைக் கொளுத்திக் கல் இடுக்கில் சொருகினான். உடனே யங்கு பூரண வெளிச்ச முண்டாயிற்று. அதன் மேல் நமது முதியோன் தான் அங்கு வைத்திருந்த தேங் காய்ச் சிப்பியிலுள்ள ஒருவித வாசனை பொருந்திய திரவப் பதார்த்தத்தை யெடுத்து அருகில் வைத்துக்கொண்டு,

தென்ன ஓலைகளால் செய்த தன் உடையை மெதுவாய்க் கழற்றத்தொடங்கினன். கழுத்திலிருந்த கட்டை யவிழ்க்கத் தொடங்கித் தன் தேகத்தில் கொஞ்சம் பாகத்தைக் கண்டதும் மிக்க ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்து அப்படியே பிரமித்துக் கீழே விழப்போனவன் பின்னிருக்கும் பாறையின்மேல் சாய்ந்துவிட்டான். அப்பாறை முட்கள்போலிருந்தது. இதுவரையில் அவன் தேகம் அதில் பட்டிருந்தால் அவன் பிராணவஸ்தைப்படுவான். இப்போது அவன் முதுகுமுழுமையும் அப்பாறையில் பலமாய்த்தாக்கியும் அது அவனுக்குத்தொந்திரவாய் முன்போல் உறுத்தவில்லை.

அதன்மேல் அவ்வயோகிகன் தன் உடைகளை யவிழ்த்துத் தன் தேகமுழுதும் கண்டதும், ஓ! என்ன ஆனந்தம்? என்ன ஆனந்தம்? அவன் மனம் அந்த ஆனந்தத்தைக்கொள்ளமுடியவில்லை. கிழவன் ஓ கடவுளே யென்று ஆனந்தக் கூத்தாடினன். ஏனெனில் அவனைப் பற்றியிருந்த அக்கொடிய வேதனை யொழிந்துவிட்டது. உடனே முழங்காற்படியிட்டு "ஓ என் ஆண்டவனே! நான் அற்பமாகிய புழு—உன் கருணையில் சந்தேகம் கொண்டேன். என்ன மூடன்! இத்தகைய சண்டாளனுக்கு நீ கருணைசெய்தாய். என்னே உன் கருணை" என்று கண்ணீர் பெருக ஸ்தம்பித்து அசைவற்றுச் சற்று நேரம் நின்றான். இதே வேளையில் தான் ஆத்மநாதம் பிரபுவின் மாளிகையிலிருந்த அவருடைய மூதாதையின் படம் கீழே விழுந்தது.

*   *   *   *   *   *

ஆத்மநாதம் பிரபுவின் புத்திரியாகிய குசலாம்பாள் அன்று தான் கோயிலில்கண்ட வாலிபனை மறந்துவிடவில்லை. ஏனெனில் அவளால் மறக்க முடியவில்லை.

ஆயினும் நாம் ஏன் இதைக் கவனத்தில் வைத்துக்கொண்டிருக்கவேண்டும்? இனி அந்தக் கோயிலுக்குப்போகாமல் வேறு கோவிலுக்குப்போகலாமா என்று சிந்தித்தாள். அந்தோ காதல் இன்னதென்பதை யறியாத பரிசுத்த உள்ளமுடைய கன்னிகையானதால் தனக்குள் உதித்த முதற்காதலை யின்னதென்று அவள் உணரவில்லை. அவனைத் தான் சந்தித்த விஷயத்தைப்பற்றித் தன் தாய்தந்தையரிடம் கூறலாமெனில் அவளுக்கு நாணமாயிருந்தது. வேறு கோயிலுக்குப் போவதாய்க் கூறினல் தாய்தந்தையர் அதற்குக் காரணம் கேட்பார்களென்று அஞ்சி அந்த யோசனையையும் விட்டுவிட்டாள். அவள் வழக்கப்படி தினம் கோயிலுக்குச் செல்லும்போதெல்லாம் அவனையங்கு காணுதபோது தன்னை யறியாமலே அவளுக்கு மனச்சோர்வு உண்டாகியது. தன் கூடவேவரும் தோழிகளுக்குத் தன் மனதிலுண்டாகும் வியாகூலம் சற்றும் தெரியாவண்ணம் மிக்க ஜாக்கிரதை யெடுத்துக்கொண்டாள். இவ்வாறு இரண்டுவாரங்கள் கழிந்தன. அதன் பிறகு பதினைந்தாவதுநாள் குசலாம்பாள் கோயிலுக்குச் சென்றபோது தான் மறக்க முடியாதிருக்கும் அவ்வாலிபன் அங்கு முழங்காற்படியிட்டு கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டிருப்பதைக் கண்டாள். உடனே அவள் மனதில் தன்னை யறியாமலே ஒருவிதச் சந்தோஷம் உண்டாயிற்று.

குசலாம்பாள் உடனே தானும் கடவுளைத் தோத்திரம் செய்யத் தொடங்கினள். அவரவர்கள் தோத்திரங்கள் முடிந்து எழுந்தபோது இவர்கள் இருவரின் பார்வைகளும் சந்தித்தன. வாலிபன் உடனே அவளை நோக்கி, "ஆ! கருணையுடைய கன்னிகையே. அன்று நாம் சந்தித்ததுமுதல் நீ என்னை எப்போதேனும் நினைத்திருப்பா

யோ. ஆ! மகா பாபியாகிய நான் அவ்வளவு சந்தோஷத்தை யெதிர்பார்க்கலாகுமோ?'' என்றான்.

குசலாம்பாள் "வாலிபரே! நான் பெருமைக்காகப் பொய் கூறகில்லேன். நீ மிக்க மனோவேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறாய் என்று எனக்குப் புலப்படுவதால் நான் உன்னை மறக்கமுடியவில்லை'' யென்றாள். வாலிபன் "ஆ! நான் உன்னை ஒரு வினாடிகூட மறக்கவில்லை. ஏனெனில் உன் இரக்கமும் தேறுதலளிக்கக்கூடியவையுமான வார்த்தைகள் என் மனப்புண்ணுக்குச் சஞ்சீவிபோன்றிருக்கின்றன'' என்றான்.

கன்னிகை "ஆ! என் வார்த்தைகளால் உனக்கு ஆறுதலுண்டாவதாயின் அதைப்பற்றி நான் மிக்க சந்தோஷமடைவேன். உனக்குத் தேறுதல் கூறச் சகோதரியாவது தாயாராவது இல்லையா?'' என்றாள். இதைக் கேட்டதே வாலிபன் மிக்க துயரமடைந்து, ''சகோதரி! தாயார்! அந்தோ நான் ஒரு அனாதை. எனக்கு ஒருவருமேயில்லை. எனக்கு ஒரு சுற்றத்தாரும் தெரியாது. என் விதி என்றைக்குமே யிப்படித் தெரியாமலே யிருந்துவிடினும் இருக்கலாகும். அந்தோ! உன்னுடைய தேறுதலான மொழிகளால் எனக்குண்டாகுமானந்தம் இவ்வளவென்று உனக்குத் தெரியாது. நீ யொரு தேவமாதே யென்று நினைக்கிறேன். சகோதரி! ஆ எனக்குமட்டும் ஒரு சகோதரி யிருந்திருந்தால், அதிலும் அச்சகோதரி நீயாயிருந்தால்...!'' என்றான். அவன் இரண்டொரு வினாடிகள் மௌனமாயிருந்து மறுபடி "ஆம். நீ தேவமாதே. நான் இப்படி முகஸ்துதி கூறுகிறேனென்று கருதவேண்டாம், என் வரையில் அத்தகைய நடக்கை என்னிடம் இருக்கமுடியாது, இருப்பது வெட்கக்கேடு—வீண் வெட்கக்கேடு—நகைப்புக்கிடம்'' என்றான்.

இவன் மிக்க ஆத்திரத்தோடு இவ்வாறு கூறியதைக் கேட்ட அக்கன்னிகை வியப்புற்று யாராவது நம்மைப் பார்க்கிறார்களோ வென்று நாற்புறமும் பார்த்தாள். சற்று தூரத்திலுள்ள தன் தோழிகள் தவிர அருகில் வேறு யாருமில்லை. ஒரு கிழவி மட்டும் முழங்காலிட்டுத் தோத்திரம் செய்துகொண் டிருந்தாள். ஆனால் அவள் தன் தோத்திரத்தைத்தவிர வேறு எதையும் கவனிக்க வில்லை என்று தோன்றியது.

வாலிபன் மறுபடி பேசத்தொடங்கி "ஓ கடவுளே! என் துயரம் அளவிடற்கரியது. அப்படியிருந்தும் நான் ஆண்டவன்மேல் வைத்திருக்கும் பூரண நம்பிக்கையால் இதைச் சகித்துக்கொண் டிருக்கிறேன். நான் இவ்வுலகிலேயே ஆண்டவனுடைய அருளைப்பெறுவிடினும் மறு உலகிலாவது இப்போதனுபவிக்கும் துன்பத்திற்கு ஈடான சுகமனுபவிப்பேன். நான் எவ்வளவு கூறினாலும் குற்றம் செய்தவனாகவாவது பைத்தியக்காரனென்றாவது என்னைக்கருதவேண்டாம். உன்னை யன்று பார்த்தது முதல் மறுபடி உன்னைக்காண இக்கோயிலுக்கு வர வேண்டுமென்று என் மனதில் ஒரு அடக்கமுடியாத ஆவல் தோன்றியது. என்னால் கூடியவரை யதைத்தடுத்தும் கடவுளே என்னைத்தூண்டுவது போல் என் மனதிலொரு உணர்ச்சி யுண்டாயிற்று. ஆகையால் கடைசிதரமாக இன்று வந்து உன்னைக்காணத் துணிந்தேன். இனிப்போய் வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றான். அந்த வாலிபன் செல்லும்போது "ஓ பரிசுத்தமான கன்னிகையே இவ்வுலகில் எவ்வளவு சுகபோகங்களும் சந்தோஷமும் இருக்கின்றனவோ அவ்வளவையும் ஆண்டவன் உனக்குச் சீதனமாயளிப்பாராக எந்நேரமும் தாங்கொணாத்துயரத்தை யனுபவித்துக்கொண் டிருப்

பினும் ஆண்டவனை நான் பூரணமாய் நம்புவதும், என் போல் சொல்பதுன்பமாவது துயரமாவது, அனுபவிப் போர்களுக்குத் தேறுதலும் என்னாலியன்ற உதவியுமளிப் பதையே தொழிலாகவுடையதும் சத்தியமாயின் ஆண்டவன் என் பிரார்த்தனைகளை யேற்று உனக்கு அவ்வாறே ஆசீர்வாதமளிப்பார்'' என்று கூறிச்சென்றான்.

ஆகையால் குசலாம்பாள் அவன் ஜனக்கூட்டத்தில் மறைந்து போகுமளவும் அவனைப் பார்த்திருந்து சற்று நேரம் அங்கேயே அசைவற்று நின்றாள். அவன் வார்த்தைகளால் அவளுடைய மனம் இளகிக் கண்ணீர் பெருகியது. அவள் உள்ளத்தில் முதலில் அவளையுமறியாது தோன்றிய காதல் முளைவேரூன்றிப் பரந்து வளர்ந்த ஒரு செடியாய் விட்டது போல், அவள் மனதில் காதற் சுடரின் சுவாலை வீசியது. சுமார் பத்து நிமிடங்கள் கழிந்த பின்பே அவள் மெதுவாய்த் தன் தோழிகளை யழைத்துக் கொண்டு மாளிகைக்குச்சென்றாள்.

இதை வாசிக்கும் நம்நாட்டுச் சகோதரசகோதரிகள் இச்சந்தர்ப்பத்தில் ஒரு விஷயம் கவனிக்கத்தக்கது. நமது குசலாம்பாள் மிக்க பரிசுத்தமான உள்ளமுடையவளென்றும் உலகிலுள்ள சூது, வஞ்சனை, கபடம், அக்கிரமம் இவையின்ன தன்மையனவென்றே அவளுக்குத் தெரியாதென்றும் நாம் முன்னமே கூறியிருக்கிறோம். அவள் சந்தித்த அவ்வாலிபனோ காதல் என்ற வார்த்தையையே கனவிலும் கருதக்கூடியவனல்ல. அதைப் பற்றி நினைத்தாலும் அவன் உளம் நடுங்கி மிக்க மனோவேதனையால் வருந்துவான். அதன் காரணம் அவன் யாரென்று தெரிந்த பின்பே விளங்கும். இச்சமயம் அவன் யாரென்று நாம் கூறத்தகாது. இதை வாசிக்கும் நண்பர்களே சந்தேகங்கொண்டால் கொள்ளட்டும். இவன்

மேல் கொண்டகாதல் கைகூடத்தக்கதல்ல வென்பதை யுணர்த்தும் பொருட்டே மேற்கண்ட விவரத்தைக்கூறி னோம். கள்ளங்கபடற்ற பரிசுத்த உள்ளமுடைய அப் பெண்ணின் மனதில் உண்டான அந்தக் கைக்கூடாக் காதலால் அவள் எத்தகைய மனோவேதனையை யனுப விக்க நேரிடும் என்பதை இதை வாசிப்போர்களே யூகித் தறியலாகும். அந்தோ இப்பாபம் யார் தலைமேல்? அவ ளுக்கு அக்காதல் உண்டானது எக்காரணத்தால்? அவள் அவ்வாலிபனைக் கண்டு அவனோடு சம்பாஷித்ததே அதற் குக் காரணம் என்பது வெளிப்படை. ஆனால் அவள் அப் படிக்கண்டு பேசியதற்கு இடந்தந்தது அவர்கள் இலௌ கிக ஆசாரமே யன்றி வேறென்ன?

கலியாணமாகாத நமது வயது வந்த மங்கையர் குடும்பத்திலுள்ள தந்தை, சகோதரர்கள் தவிர வேறு வாலிப சுற்றத்தார் எவரோடும் வார்த்தை யாடலாகா தென்றும், இன்னும் அவர்கள் எதிரிலேயே செல்லக்கூடா தென்றும் நமது ஆசாரத்தில் விதிகளிருக்கின்றன. மேற் கண்ட அனுபவத்தால் நமது முன்னோர்களின் ஏற்பாடு கள் எவ்வளவு அறிவுடையார் செய்கை யென்பதும், நமது மாதர்களின் நன்மையைக்கருதி எவ்வளவு ஆழ்ந்த யோசனையோடு செய்யப்பட்டன வென்பதும் அறிவாளி களுக்கு நன்கு புலப்படும். இப்படி யிருக்க நம்மவரிற் சிலர் நமது மாதர்களை நாம் அப்படி அடக்கி வைத்திருப் பது அவர்கள் மேல் அவநம்பகம் கொள்வதாகும் என் றும் ஆகையால் வயது வந்த பிறகும் அவர்களைப் பாட சாலைக்கும் மற்றவிடங்களுக்கும் போகும்படித் தாராள மாய் விட்டுவிடவேண்டுமென்றும், அதுவே நாகரீகச்சீர் திருத்தமென்றும் கருதி அவ்வாறே பிறர்க்கும் போதனை செய்கிறார்கள். அந்தோ! இத்தகையோர் சற்று சிந்தித்

துப்பார்த்தால் தங்கள் அபிப்பிராயம் நம் தாய் நாட்டிற்கு எத்தகைய அழிவை யுண்டாக்குமென்பது இவர்கள் புத்திக்கே நன்கு விளங்கும். இத்தகைய கேடளிக்கும் புத்திமதிகளுக்கு நமது நாட்டார்கள் ஒருபோதும் இடந்தராவண்ணம் நமது பாரதமாதாவாகிய பரம்பரையே பாதுகாக்கும் என்பது நமது பூரணநம்பிக்கை. ஏனெனில் நம் மாதர்களின் நெறியே நம் நாட்டின் தெய்வக்காப்பு அல்லது காப்புத் தெய்வமாகும். அது அழிந்தால் நம் நாட்டின் தெய்வீகத்தன்மை போய்விடும். ஆனால் சத்தியமான தெய்வ வழிபாடும் கடவுளின் இலட்சணங்களும் என்று மழியாதவை. ஆதலின் அவை ஆதி முதல் விளங்கியிருக்கும் புண்ணியபூமியாகிய இப்பாரத கண்டத்தில் மாதர் நெறியும் நிலையாயிருந்தே தீரவேண்டும். ஆனால் கால தர்மத்தின்படி வெளிக்கு அதன் பிரகாசம் ஓர்கால் குறைந்தும் ஓர்கால் ஏறியுமிருக்கலாகும். ஆயினும் அந்த உண்மையானச் சத்திய தெய்வீகதீபம் ஓர்போதும் இப்புண்ணிய பூமியில் அணைந்துவிடாது. இங்கணைந்தால் பின் எங்குமேயில்லை யாதலின். ஆகையால் நம்மாதரின் ஆசார ஒழுக்கங்களை மாறுபடுத்தக் கருதுவோர் பெரும்பாபத்தை யடைவார்களேயன்றி ஒருகாலும் நற்பயன் பெறுர்கள்.

குசலாம்பாள் கோயிலைவிட்டுச் செல்லுமுன் தானும் அந்த வாலிபனும் சம்பாஷிப்பதை யாரேனும் காண்கிறுர்களாவென்று பார்த்தாளென்றும், அப்போது அங்கொரு கிழவி மட்டுமே சமீபத்திலிருந்தாளென்றும், அவள் எதையும் கவனிக்காது தன் பிரார்த்தனையிலேயே நாட்டமுடையவளாயிருந்தாளென்றும் கூறினேமல்லவா! உண்மையில் அக்கிழவி அப்படி யபிநயித்தாளே யன்றி, அவள் அங்கிருந்த காலமெல்லாம் அவ்வாலிபன் மேலும்

அவனுக்கும் குசலாம்பாளுக்கும் நடந்த சம்பாஷணையின் மேலும் பூரணமாய்க் கவனத்தைச் செலுத்திக்கொண்டிருந்தாள். அவ்வாலிபனும் அக்கன்னிகையும் சம்பாஷித்துக்கொண்டிருந்தது இன்னதென்று ஒரு வார்த்தையேனும் அவள் செவியில் விழாவிடினும் அவர்கள் இருவரும் காதலர்கள் என்றும், அவ்வாலிபன் காதலின் உணர்ச்சியை நன்ருய் உணர்ந்தவனென்றும் அறிந்துகொண்டு, ஆ! இவன் நமது எஜமானியின் அபூர்வ வனப்பைக் கண்டால் மிக்க வியப்படைந்து காதற்கடலில் முழுகி விடுவான் என்று தனக்குள் குதூகலித்தாள்.

அவ்வாலிபன் கோயிலைவிட்டுப் புறப்பட்டு ஒரு பின்பக்க வாயில் வழியில் நுழைந்து வீதிக்குள் பிரவேசித்தான். கிழவி அவனைப் பின் தொடர்ந்து சென்று சற்று தூரம் நடந்தபின், அவனை நெருங்கி, "ஓ! அழகிய வாலிபனே! தயவுசெய்து என்னிடம் இரண்டு நிமிடங்கள் தாமதித்து என் வார்த்தைகளைக் கேட்கவேண்டும். நான் கூறப்போகும் விஷயம் இன்னதென்றறிந்தால் நீ பிரியத்தோடு கேட்பாயென்றே நான் நம்புகிறேன்" என்ருள்.

வாலிபன் "ஆ! மூதாட்டியே! யாரேனும் துன்பமோ துயரமோ அடைந்தவர்களாயின், அத்தகையோர்க்குத் தேறுதல் கூறுவது அல்லது என்னாலான உதவி செய்தல் முதலிய வேலைகளாயிருந்தால் சந்தோஷமாய்ச் செய்ய ஆயத்தமாயிருக்கிறேன்" என்ருன்.

இவன் மொழிகளைக்கேட்ட மூதாட்டி "ஆம் ஆம். மனவேதனையைச் சகிக்கமுடியாத ஒருவருக்கு உதவி செய்து அவர்கள் வேதனையைத் தீர்ப்பதற்கே நான் உன்னை யழைக்க வந்தேன். உன்னுடைய உத்தமமான குணங்களை யறிந்து நம்பிக்கையோடேயே நான் உன்னிடம் இதைக் கூறுகிறேன்" என்ருள். முதலில் அவள்

தன் எஜமானியின் அழகை வர்ணித்துக்கூறி இவன் மனதில் காதற்சுடர் கொழுந்துவிட்டெரியச் செய்தால் இவன் மயங்கி வந்து விடுவானென்றே கருதினாள். ஆனால் வாலிபன் அவசரப்பட்டு கூறிவிட்ட மொழிகளால் "ஓகோ! இவன் குணங்கள் நாம் கருதியதற்கு மாறாக விருக்கின்றன. ஆதலால் இவன் மொழிகளுக்குத் தக்கவாராய் நாம் தந்திரமாய்ப் பதில் கூறி இவனை மெதுவாய் நமது எஜமானி முன் கொண்டுபோய் விட்டுவிட்டால், அவள் வனப்பைக் கண்டதேயிவன் மயங்கி அவளுக்கு வசியமாகி விடுவான் என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு மேற்கண்டவாறு விடையளித்தாள்.

வாலிபன் "நீ கூறுவதால் என் உதவி உனக்கல்ல உன் நண்பர் ஒருவருக்கென்று தெரிகிறது. என்னால் அவர்களுக்கு எத்தகைய உதவிவேண்டும்?" என்றான். மூதாட்டி "ஓ! மிக்க பெருந்தன்மையும் பரோபகார சிந்தனையுமுடைய வாலிபரே! தயவுசெய்து துரிதமாய் என் கூடவாரும். யாவுமறிந்த பின் நான் கூறிய விஷயம் உமது மனதிற்கு மிக்க திருப்தியையும் சந்தோஷத்தையும் அளிக்கத்தக்கதென்று அறிந்து ஆனந்தமடைவீர்" என்றாள். வாலிபன் அதன்மேல் வார்த்தை யாடாமல் அவள் கூடவே சென்றான்.

உடனே அவனுடைய நினைப்புத் தான் சற்று நேரத்திற்கு முன் கோயிலில் சந்தித்த அக்கன்னிகையைப்பற்றி சிந்திக்கத் தொடங்கியபடியால் அவன் கிழவியை மறுபடி ஒரு கேள்விகூட கேட்கவில்லை. அது மட்டுமல்ல, அவள் தன்னை எங்கு அழைத்துச் செல்கிறாள் என்பதைப்பற்றி கூட அவன் கவனிக்கவில்லை யாதலால் எவ்வழியே செல்கிறோமென்பதும் அவனுக்குத் தெரியாது.

கடைசியில் ஒரு பெரிய மதில் சுவரிலிருக்கும் சிறு

வாசற்படியண்டை யக்கிழவி நின்று தன்னிடமிருந்த சாவியையெடுத்து அங்கிருந்த கதவைத் திறந்ததும், இருவரும் உள்ளேயிருந்த ஒரு பெரிய தோட்டத்திற் பிரவேசித்தார்கள். அச்சமயம் இரவு பிரவேசித்துச் சற்று நேரம் கழிந்ததால் எங்கும் இருள் சூழ்ந்திருந்ததோடு வானத்தில் மேகம் நிறைந்து மழை வரும்போலிருந்தது. அத்தோட்டத்திலிருந்த ஒரு பெரிய கட்டிடம் வாலிபன் கண்களுக்குத் தோன்றியது. ஆனால் இருளில் அதன் விவரம் ஒன்றும் புலப்படவில்லை. வாலிபனுக்கு மனதில் எவ்விதச் சந்தேகமாவது அச்சமாவது தோன்றாததால் கிழவியை யதுவரையில் அவன் ஒன்றும் கேட்கவில்லை.

இருவரும் அத்தோட்டத்தைக் கடந்தபின் மூதாட்டி அக்கட்டிடத்திலிருந்த ஒரு வாயிற்படி வழியாய் அவனை யுள்ளே யழைத்துச்சென்றாள். அந்த விடத்தில் மேலேறிச்செல்லும் படிகள் இருந்தன. அவை பரிசுத்தமும் பளபளப்புமான வெள்ளைச் சலவைக்கற்களால் கட்டப்டிருந்தன. அங்கு வெள்ளியாற் செய்த தீபங்களில் மணம் பொருந்திய மெழுகு வத்திகள் எரிந்துகொண்டிருந்தன. நமது வாலிபன் அச்செல்வப் பெருக்கைக் கண்டு வியப்பாவது அச்சமாவது கொள்ளவில்லை. ஏனெனில் அவன் சற்றும் களங்கமில்லாத உள்ளமுடையவனானதால், தனக்கு இங்கு ஏதேனும் கெடுதி நேரிடுமென்றாவது, அக்கிழவி தன்னிடம் சூதாய் நடந்துகொண்டிருப்பாளென்றாவது, அவன் மனதிற் கொஞ்சங் கூடப் புலப்படவேயில்லை.

அம்மூதாட்டி அப்படிகளின் வழியாய் அவனை யழைத்துக்கொண்டு மாடிமேலேறி அங்கிருந்த தாழ்வாரத்தின் வழியே சென்று கடைசியில் ஒரு கதவைத் திறந்து நமது வாலிபனை நோக்கி "தயவுசெய்து இந்த அறைக்குள் செல்லும். எல்லா விஷயங்களும் விவரமாய்த் தெரியும்" என்றாள். வாலிபன் அவ்வாறே அந்த அறைக்குள் நுழைந்தான்.

15-வது அத்தியாயம்.

வாலிபனும் வனப்புடையமாதும்—அதிசயமான சந்திப்பு—வாலிபன் மர்மமான ஆபத்தில் சிக்கிக்கோள்ளல்—மாயசிங்கன்-கள்ளர் கூட்டமும் அவர்கள் வாசஸ்தலமும்.

அறைக்குள் சென்ற வாலிபன் அறையை நாற்புறங்களிலும் நோக்கினன். அந்த அறை மிக்க அழகாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அறையின் நாற்புறச் சுவர்களிலும் விலையுயர்ந்த பட்டுத்திரைகள் விடப்பட்டிருந்தன. அங்கிருந்த மேஜை நாற்காலிகள் முதலிய யாவும் மிக்க செல்வப் பெருக்கைக்காட்டின. அவசரமாய்ப் பார்த்த பார்வையிலேயே இந்த இடம் மிக்க செல்வம்பொருந்தியவர்கள் வாழும் மாளிகையென்றுணர்ந்ததும், "அடடா! இத்தகைய செல்வம் பொருந்திய நிலைமையிலிருப்போர்க்கு நாம் செய்யத்தக்க உதவி என்ன விருக்கப்போகிறதென்று கருதினன். உடனே அவன் மனதில் பெரிய சந்தேகமும், பீதியும் உண்டாயின. ஆகையால் இதைப்பற்றி மூதாட்டியை யிரண்டொரு கேள்விகள் கேட்கவேண்டுமென்று கருதித் துரிதமாய்த் திரும்பிப் பார்த்தான். மூதாட்டி அங்கில்லாததையும், அறையின் கதவு மூடப்பட்டிருப்பதையும் கண்டதும் மிக்க மனக்குழப்பமும் திகிலும், அச்சமும் அவன் மனதில் உதித்தன. ஆகையால் அவன் முகத்தில் மிக்க விகாரமான் குறியுண்டானதும் மயங்கி நின்றான்.

அச்சமயம் அந்த அறையின் ஒரு மூலையிலிருந்த ஒரு சோபாவின்மேல் அமர்ந்திருந்த ஒரு கெம்பீரமான மாது எழுந்து அவன் அருகில் வந்து மிக்க அன்போடும் மரியாதையோடும் அவன் கரத்தைப்பற்றிக் கொண்டு "வாலி

பரே! வாரும் வாரும்" என்று சிரித்த முகத்தோடு கூறி அவனை யழைத்துக்கொண்டுபோய் சோபாவின் மேல் உட்கார வைத்துத் தானும் அவனருகில் அமர்ந்தாள்.

அம்மாது நடுவயதுள்ளவள்போல் தோன்றினும் அவள் வனப்பு பூரணமாகவே யிருந்தது. அவள் உடைகள் அரசமாதர்கள் அணியும் உடைகள்போல் மிக்க விலை யுயர்ந்தவைகளா யிருந்தன. ஆபரணங்களும் அவ்வாறே யிருந்தன. வாலிபன் இன்னும் ஒரு அய்யமுங்கொள்ள வில்லை. ஆனால் இத்தகைய உயர்ந்த அந்தஸ்திலிருக்கும் இம்மாதிற்கு நாம் செய்யத்தக்க உதவி என்ன விருக்கப் போகிறது என்று வியப்படைந்தான்.

அம்மாது அவனை நோக்கி "வாலிபரே! இங்கு நீர் அழைத்து வரப்பட்டதன் காரணம் இன்னதென்று இனித்தான் நீர் அறிந்துகொள்ள வேண்டுமல்லவா?" என்றாள்.

வாலிபன்:—"உம்முடைய ஆள் எனக்குக் கூறியவாற்றால் என்னுடைய நோக்கத்திற்கும் விருப்பத்திற்கும் தகுதியான விஷயம் என்கிறவரையில் அறிந்து கொண்டேன்" என்றான்.

அம்மாது:—"ஓ அப்படியாயின் நீ என்னைப் பார்த்திருக்க வேண்டும் நான் யாரென்று உனக்குத் தெரிந்திருக் கிறது" என்றாள்.

வாலிபன் இரண்டு கேள்விகளுக்கும் தெரியாது என் றான். அம்மாது "என்ன ஆச்சரியம். என் விருப்பத்திற்கு ஒத்த விஷயம் என்றுமட்டும் கூறுகிறாயே. என் வேலைக் காரி நான் உன்னை நன்றாய்ப் பார்க்க மிக்க ஆவல்கொண் டிருக்கிறேனென்று உன்னிடம் கூறியிருப்பாள். இதோ பார்! நான் நீ எதிர்பார்த்த அவ்வளவு வனப்புவாய்ந்தவ ளாக விருக்கிறேனா இல்லையா?" என்றாள்.

இக்கடைசிமொழிகளைக் கேட்டதே வாலிபன் ஓகோ நாம் மோசம்போய்விட்டோம் என்று எண்ணினன். அவன் முகத்திலுண்டான கலவரத்தைக்கண்ட அம்மாது வியப்படைந்து "இதென்ன ? என்னமோ தவறு நேர்ந்து விட்டிருக்கிறதுபோல் காண்கிறது" என்றாள். வாலிபன் "ஆம் ஆம் இருபட்சங்களிலும் தவறான அபிப்பிராயமே நேர்ந்துவிட்டிருக்கிறது. நான், இங்கு வியாதியோ மனோவேதனையோ அனுபவித்துக்கொண்டிருக்கும் ஒருவருக்கு ஆறுதலளிக்க அழைக்கப்படுகிறோமென்ற எண்ணத்தோடு வந்தேன்; வேறுகாரணம் இருக்குமென்று நான் கருதவேயில்லை" என்றான்.

இம்மொழிகளைக் கேட்ட அம்மாது சற்று வெறுப்போடு ஓ! இது குருமாருக்கிருக்கவேண்டிய பிரியம். ஒரு யௌவன வாலிபருக்கிருக்கவேண்டிய பிரியமல்லவே" என்று கூறியதும் "அடடா! நாம் இவன்மேல் கோபித்துக்கொள்வதில் பயனில்லை. தந்திரமாக இவனை மயக்கப் பார்க்கவேண்டும்" என்று தீர்மானித்துக்கொண்டு "ஆ! வாலிபரே! நான் அவசரப்பட்டு இப்படிக் கூறியதற்கு மன்னிக்கவேண்டும். நீ கூறியபடியே ஒரு ஆளின் மனோவேதனையை நீக்கி அவர்களுக்குச் சந்தோஷத்தை யளிக்க வேண்டிய வேலையே யிங்கிருக்கிறது. நான் கூறுவதைச் சற்று கவனமாய்க்கேள். நானும் என் சினேகிதர் சிலரும் ஒருநாள் சமீபத்திலிருக்கும் மலைச்சாரலில் உலவச் சென்றிருந்தபோது அங்கு நீ ஒரு சிறு பாறையின்மேல் உட்கார்ந்துகொண்டு ஏதோ ஆழ்ந்த யோசனையிலிருந்தாய். மறுபடி யொருநாள் கடைவீதியிலும், பிறகு ஒரு நண்பர் வீட்டிலும் கண்டேன். இப்படி ஐந்தாறுமுறை கண்டேன். அதன்மேல் உன்உருவம் என் மனதில் பதிந்துவிட்டது. உன் வனப்பை யருகிலிருந்து காணவேண்டும், உன்னோடு

சம்பாஷிக்கவேண்டும் என்ற ஆவல் எனக்கு அதிகமாய் விட்டது. ஆனதால் என் வேலைக்காரியிடம் உன்னைப் பற்றிகூறினேன். நீ யாரென்றும் எங்கிருப்பதென்றும் எனக்குத் தெரியாதாகையால் உன் அடையாளங்களை மட்டுமே கூறினேன். அம்மாது உடனே யுன்னையறிந்து கொண்டாள். ஏனெனில் பன்முறை யுன்னைக் கடைவீதி முதலிய விடங்களில் அவள் பார்த்திருக்கிறாள். அதன் மேல் உன்னை யெந்தவிதத்திலாவது என்னிடம் அழைத்து வரும்படி கூறினேன். ஏனெனில் நான் உன்மேல் அடக்கமுடியாத காதல்கொண்டிருக்கிறேன்'' என்று கூறிக்கொண்டே அவன் அருகிற்சென்றாள்.

வாலிபன் இவள் வார்த்தைகளைக்கேட்டு மிக்க வியப்பும் கோபமும் கொண்டு பிரமிப்படைந்து இம்மாது அருகில் வருவதைக் கண்டதும், வேண்டாமென்று தடுப்பவன் போல் தன் கரங்களை முன்னுக்கு நீட்டினான். அச்சமயம் அவன் இடது கரத்தின் மணிக்கட்டருகிலிருந்த ஒருவித மச்சத்தை யம்மாது பார்த்து விட்டாள். அவள் அதைக் கண்டதும் வீறிட்டலறிப் பின்னடைந்தாள். அவள் முகம் பனிக்கட்டிபோல் வெளுத்துவிட்டது. அவள் முகத்தில் சொல்லமுடியாத ஒருவிதப் பயங்கரமான விகார முண்டாய்விட்டது. அவள் சோர்ந்து கீழே உட்கார்ந்து விட்டாள். அதைக்கண்டவாலிபனும் பிரமித்து ஒன்றும் பேசமுடியாது மரம்போல் மிரண்டபார்வையோடு அம்மாதைப் பார்த்துக்கொண்டே நின்றான்.

அம்மாது மறுவினாடி யென்னமோ நினைத்துக் கொண்டவள்போல் ஆத்திரத்தோடு எழுந்து அவ்வாலிபன் கரத்தைப்பறி அவன் சட்டையின் கையை மேலுக்குத் தள்ளிப்பார்க்க முயன்றாள். அவள் கரத்தைப்பற்றியதே யவ்வாலிபன் தேள் கொட்டியவன்போல் துடித்து

"தொடாதே! என்னைத்தீண்டாதே ஓ மாதே தீண்டாதே. எட்டிப்போ. நான் செல்ல வழிவிடு" என்று கூவினன்.

அம்மாதும் ஆத்திரத்தோடு "ஆம். போய்விடு போய்விடு" என்று தேகம் நடுங்கிக்கொண்டே மிக்க ஆத்திரத்தோடு கூறினள். வாலிபன் உடனே திரும்பி அந்த அறையை விட்டுப் படிகளின் வழியே கீழிறங்கி முதலில் மாளிகைக்குள் பிரவேசித்த வாயிற்படி யருகில் வந்தான். அங்கு தன்னை யவ்விடத்திற்கழைத்து வந்த அம்மூதாட்டி நின்றிருப்பதைக் கண்டான். உடனே மிக்க கோபமடைந்து "ஏ சண்டாளத்துரோகி, என்ன எண்ணத்தோடு என்னை யிங்கழைத்து வந்தாய்? இன்னும் என்ன சதிசெய்ய ஆயத்தமாய் இங்கு வந்து காத்துக்கொண்டிருக்கிறாய்? வெளியேபோக வழிகாட்டுச் சீக்கிரம்!" என்றான்.

அம்மூதாட்டி "நாம் இங்கு கொண்டு வந்து விட்ட வாலிபன் அழகில் மிகுந்த நமது எஜமானியிடம் சுகமனுபவித்து விட்டு மிக்க சந்தோஷத்தோடு வருவான். நாம் அவனிடம் நல்ல பரிசுபெறுவோம்" என்று நம்பிக்கொண்டு ஆவலோடு நின்றுகொண்டிருந்தாள். வாலிபன் இவ்வாறு கோபமாய்க் கூறியதைக் கேட்டதும் அவள் மிக்க திகிலடைந்து விபரமொன்றுமறியாததால் மிக்க பீதியோடு அவனை யழைத்துக்கொண்டு தோட்டத்திற்குள் நுழைந்து அங்கிருந்து வெளிச்செல்லும் வாயிற்படியிலுள்ள கதவைத்திறந்து அவனை வெளிவிட்டாள்.

வாலிபன் வெளியிலிருந்த வீதியில் நின்றதும் இருளில் தான் அழைத்து வரப்பட்ட இடம் எதுவென்று அறிந்து கொள்வதற்காக அங்கிருந்த சுவர் மரங்கள் முதலிய யாவற்றையும் நன்கு நோக்கினன். இவன் இவ்வாறு

அங்கு நின்று இரண்டொருநிமிடங்கள்கூடக் கழியவில்லை அப்போது அருகிலிருக்கும் இருண்ட விடத்திலிருந்து யாரோ நால்வர் ஏககாலத்தில் புலிகள்போல் பாய்ந்து வந்து அவனைப் பிடித்துக் கொண்டார்கள். ஒரு வினடியில் அவன் சிக்கிக்கொண்டான். வாளை உறையிலிருந்து எடுக்கக்கூட அவனுக்கு அவகாசமில்லை. அப்படியெடுத்தாலும் நால்வர் எதிரிகள் முன் அவன் என்ன செய்யக்கூடும். அவன் என்னதான் சங்கதியென்று பார்ப்பதற்குள் அவன் கண்கள் சீலையில் கட்டப்பட்டன. அங்கிருந்து அவர்கள் அவனை யுடனே கரங்களைப் பிடித்து அழைத்துக்கொண்டு சற்றுதூரம் சென்றபின் அவனையிருவர் தூக்கி ஒரு புரவியின்மேல் ஏற்றியதும் வந்த நால்வரில் தலைவனுயிருப்பவன் ஏறுங்கள் என்றான்.

உடனே அவர்களும் குதிரைகளின் மேலேறிக் கொண்டார்கள். வாலிபன் குதிரையின் கழுத்துக் கயிற்றை வேறொருவன் பற்றிக்கொண்டான். ஐந்து குதிரைகளும் தட்சணம் துரிதமாய்ச் செல்லத்தொடங்கின. இந்தத் திடுக்கிடும்படியான வியப்பாகிய சம்பவங்கள் ஒன்றின்பின் ஒன்றாய்த் துரிதமாய் நடந்தபடியால் நமது வாலிபனுக்குச் சிந்திக்கக்கூட அவகாசமில்லை. குதிரைகள் சென்றுகொண் டிருக்கையில் ஒருவரோடொருவர் வாய்திறந்து ஒரு வார்த்தை யேனும் பேசாதபடியால் வாலிபன் சற்று சிந்திக்கலானான்.

நாம் அம்மாதின் விருப்பத்திற்கு மாறாக நடந்தால் இவ்வாறு நேர்ந்ததோவென்று யோசித்தான்.

"சே! அப்படியிராது. நாம் இப்போது நேராய் அவளிடமிருந்து வெளிவந்தோம். இதற்குள் அவள் இத்தகைய ஏற்பாடு செய்வதற்கு எப்படி முடியும். இல்லையில்லை. இது அவளால் நடந்ததல்ல" என்று அவன்

புத்தியிற்பட்டது. இதற்கிடையில் தன் கூடவரும் நான்கு குதிரைகளும் செல்லும்போது உண்டாகும் உலோகத்தோடு உலோகம் உராயும் சத்தத்தாலும் மற்ற சத்தங்களாலும், அந்த ஆட்கள் எல்லாரும் உடைவாளணிந்து கொண் டிருக்கிறார்களென்றும், அப்புரவிகளும் சைனியத்தில் குதிரைப்படையில் இருக்கும் குதிரைகள் அணிந்திருப்பதுபோலவே கவசமும் மற்றவைகளும் அணிந்து கொண்டிருக்கின்றனவென்றும் அவன் புத்தியிற்பட்டது.

உடனே அவன் திடுக்கிட்டான். மிக்க வியப்பும் திகிலும் அவனுக்குண்டாயின. ஏனெனில் உடனே அவன் மனதில் இவர்கள் இன்னவர்களாகத்தா னிருக்கும் என்று ஒரு யோசனை யுதித்தது. அது என்ன விஷயம் என்று நன்கு விளங்கும் பொருட்டு இங்கு நாம் சில சம்பவங்களைக் கூறவேண்டும். அவை என்னவெனில்,

சுமார் ஒருவருட காலமாய் நவீனபுரியிலும் அதன் சுற்றுப் பக்கங்களிலும் ஒரு பெரிய பயங்கரமான வதந்தி யுலவிக்கொண்டிருந்தது. அவ்வதந்தியும் அதைப்பற்றிய அனுபவமான சம்பவங்களும் பின் வருமாறு.—

நகர ஓரத்தில் எங்கோ ஒரு விடத்தில் ஒரு பலமான கொள்ளைக்கூட்டத்தார் இருக்கிறார்கள். அவர்கள் திடீலென்று நாம் எதிர்பாராத விடத்தில் எதிர்பாராத காலத்தில் முளைக்கிறார்கள். அவர்கள் செய்கைகளோ மிக்க அபூர்வமானச் செயல்கள். அவர்கள் தலைவன் மிக்க அபூர்வ சாமார்த்தியமுடையவன். அவன் வேலைகளும், குணமும் யாவரும் பிரமிக்கத் தக்கவைகளாயிருக்கின்றன. அவன் தன் கொள்ளைத்தொழிலில் ஒருவித நீதியை யனுசரித்தே செய்கிறான், பணக்காரரான குரூர குணமுடைய ஜாகீர்தார்கள், மிட்டாதார்கள் முதலிய பிரபுக்களைக் கொள்ளையடிப்பதும், அப்படிக்கொள்ளை

யடித்த சொத்தில் பெரும்பாலானவற்றை அப்பிரபுக்களால் அக்கிரமமாய் நடத்தப்பட்டவர்களும், கஷ்ட நஷ்டங்களை யடைந்தவருமாகிய ஏழைக் குடியானவர்களுக்குக் கொடுப்பதுமே அவனுடைய பெரும்பாலான வேலை.

அக்காலத்தில் அந்நாட்டரசன் பூமிகளைப் பாளையக்காரர், ஜமீன்தார், ஜாகிர்தார் இவர்களுக்கே பகிர்ந்துவிட்டுவிட்டு தக்க நிலவரியை யவர்களிடம் சில நிபந்தனைகளின்மேல் வாங்கிக்கொள்வது வழக்கமாயிருந்தது. அப்பிரபுக்கள் தங்கள் எல்லைக்குள் பூரண அதிகாரம் செலுத்த அனுமதிபெற்றவர்களானதால் தங்களிடம் குத்தகைக்கு நிலத்தைப்பெற்று ஜீவிக்கும் குடியானவர்களுக்கு மிக்க கஷ்டமான விதிகளை யேற்படுத்தி அவர்களுக்கு மிக்க அக்கிரமம் செய்துகொண்டிருந்தார்கள்.

எந்த ஜமீன்தாரேனும் ஒரு ஏழைக் குடியானவனுக்கு அக்கிரமம் செய்ததாய் கள்ளத் தலைவனுக்குத் தெரிந்தால் அவன் உடனே "அக்குடியானவனுக்கு குறித்த தேதிக்குள் தக்க நியாயம் நடத்தாவிட்டால் உமது மாளிகை கொள்ளை யடிக்கப்படும்." என்று அச்சமீன்தாரனுக்கு ஓர் அறிக்கை யனுப்பிவிடுவான். ஆனால் அதுவீண் மிரட்டாயிராது. ஏனெனில் அப்பிரபு அந்த அறிக்கைப் படி நடக்காவிட்டால் கட்டாயம் குறித்த தேதியில் அப்பிரபுவின் மாளிகை எத்தகைய பாதுகாப்பிலிருந்தாலும் நடு இரவில் பூரண ஆயுதமணிந்த போர்வீரர்கள்போன்ற வீரர்களால் கொள்ளை யடிக்கப்படுவது நிச்சயம்.

இது மட்டுமல்ல; அக்கள்ளத் தலைவன் பார்வைக்கு மிக்க கம்பீரமான அழகிய உருவ முடையவன். அவன் மாறுவேடமணிந்து நகரத்திலும் அதன் சுற்றுப்பக்கமுள்ள இடங்களிலிருக்கும் எத்தகைய செல்வவந்தர்கள் பிரபுக்கள் முதலியவர்கள் வீட்டிற்கும் செல்வான். முக்

கியமான புராதனப் பிரபுக்களின் மாளிகைகளிலுள்ள நிலவறைச் சுரங்கங்களிலுள்ள மிக்க இரகசியமான வழிகளெல்லாம் அவனுக்கு எப்படியோ தெரிந்திருக்கின்றன. அந்த மாளிகைகளில் வசிப்பவர்களுக்கே அந்த இரகசிய மார்க்கங்கள் தெரியாது. அத்தலைவன் பெயர் மாயசிங்கன். அவன் இவ்வாறு எல்லா விடங்களுக்கும் செல்வதால் ஆங்காங்கு நடக்கிற சங்கதிகளனைத்தும் அறிந்துகொண்டு தன் அனுகூலத்திற்குத் தக்கவாறு அவற்றை யுபயோகப்படுத்திக்கொள்வான். அவன் கூட்டத்தில் எவ்வளவோ பேர் இருக்கிறார்களென்று யாவரும் கூறிக்கொண்டிருக்கிறார்களே யொழிய அவனிடம் எத்தனைபேர்களிருக்கிறார்களென்று ஒருவர்க்கும் தெரியாது.

அவன் ஆட்களும் ஒரு விடத்தில் திடீலென்று தோன்றித் தங்கள் காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு ஒரு விநாடியில் மாயமாய் மறைந்து விடுவார்கள். ஆனால் எல்லா விஷயங்களுக்கும் அவனே நேரில் வருவதில்லை. அவனிடமுள்ள மூன்று படைத்தலைவர்கள் போன்றவர்களில் யாரேனும் ஒருவர் தலைவராய்ச் செல்வார்கள். மாயசிங்கன் அரசன் போல் யாவற்றிற்கும் மூலகாரணமாயிருந்து நடத்துவான். உண்மையில் நடக்கும் சங்கதியிவ்வளவேயாயினும் ஜனங்களுக்குள் ஒன்றுக்குப் பத்தான வதந்திகள் உலவிக்கொண்டிருந்தன. துரைத்தனத்தார் குதிரைப்படைகளை சிறுசிறு கூட்டங்களாகப்பிரித்து பல விடங்களில் பதுங்கியிருந்து அக்கள்ளக் கூட்டத்தைப் பிடிக்கும் படிக்கும் வாசஸ்தலத்தைக் கண்டுபிடிக்கும் படிக்கும் எவ்வளவோ முயற்சி செய்தார்கள். கள்ளரின் சிறுசிறு கூட்டங்கள் இரண்டு மூன்று முறைகளில் போர் வீரரால் காணப்பட்டன. அச்சமயங்களில் ஒரு சமயம் போர் வீரர்களும் ஒரு சமயம் கள்ளரும் செயம்

பெற்றார்கள். ஆனால் கள்ளர்கள் அகப்படுவதுமில்லை. அவர்கள் இருப்பிடமும் கண்டுபிடிக்கப்படவுமில்லை.

நமது வாலிபனுக்குத் திடீரென்று இச்சங்கதிகள் யாவும் நினைவிற்கு வந்தது. உடனே ஓகோ நாம் மாயசிங்கன் கூட்டத்தாரிடந்தான் சிக்கிக்கொண்டோம் என்று எண்ணிக்கொண்டான். இவர்கள் சுமார் ஒருமணிநேரம் வேகமாய் நடந்தபின் ஒருவிடத்தில் தங்கினார்கள். உடனே ஒருவன் வாலிபனைக் குதிரையினின்று கீழிறக்கி அவன் கரத்தைப் பிடித்து அழைத்துக்கொண்டு சென்றான். மற்ற மூவரும் பின்னால் நடந்தார்கள். காலடிகளால் உண்டான சத்தத்தால் ஒரு குகைக்குள் போவதுபோல் வாலிபனுக்குத் தோன்றியது.

அவ்வழியாய்ச் சுமார் இருநூறுகஜ தூரம் சென்றதும் ஒரு பெரிய பலமான கதவு திறக்கப்பட்டது. அதற்குள் இவர்கள் நுழைந்ததே அக்கதவு மூடப்பட்டது. அங்கிருந்து சற்றுதூரம் சென்றபின் இவர்கள் நின்றார்கள். உடனே நமது வாலிபனுடைய கண்கட்டு அவிழ்க்கப்பட்டது.

இப்போது தான் வந்திருக்கும் இடம் இன்னதென்றும், நகரத்தின் எத்திக்கில் இது இருக்கிறதென்றும் நமது வாலிபனுக்குச் சற்றும் தெரியாது. அவன் கண்களைத் திறந்ததும் அங்கிருந்த காட்சியைக்கண்டு வியப்பும் திகிலுமடைந்தான். அந்த இடம் ஒரு விசாலமான குகை. அங்கு சுமார் ஐம்பது அறுபது ஆட்கள் இருந்தார்கள். அவர்களெல்லாம் பலாட்டியர்களாய் பார்வைக்குச் சற்று பயங்கரமானவர்களாகவே காணப்பட்டார்கள். அவர்கள் உடைகள் ஏறக்குறைய இராணுவ உடைகளாகவேயிருந்தன. அவர்கள் ஆங்காங்கு சிறுசிறு கூட்டங்களாக உட்கார்ந்துகொண்டு, சிலர் தங்கள் கத்தி ஈட்டி முதலிய

ஆயுதங்களை தீட்டிக்கொண்டும், சிலர் அவற்றைத் துடைத்துக்கொண்டும், சிலர் உடைகளைப் பழுதுபார்த்துக்கொண்டும், சிலர் சிற்றுண்டி யருந்திக்கொண்டும், சிலர் சம்பாஷித்துக்கொண்டும் இருந்தார்கள். இவர்கள் உள்ளே வந்ததைக்கண்டதும் அவர்கள் யாவரும் திடீலென்றெழுந்தார்கள்.

இவர்களைக் கண்டதே நமது வாலிபன் "இவர்கள் கள்ளர்களாகவே யிருக்கவேண்டும். நாம் மாயசிங்கன் கூட்டத்தாரிடம்தான் சிக்கிக்கொண்டோம்" என்று நிச்சயித்துக்கொண்டு மிக்க திகிலடைந்துவிட்டான். "ஆயினும் இவர்களுக்கு நாம் என்ன செய்தோம். இவர்கள் கோபத்திற்கு நாம் பாத்திரனானதெப்படி?" என்று என்ன யோசித்தும் அவனுக்குச் சற்றும் விளங்கவேயில்லை.

அந்தக் குகையின் ஒரு மூலையில் படிக்கட்டுகள் இருந்தன. அதன் வழியே ஒருவன் வாலிபனை யழைத்துச் சென்றான். நீண்ட அவ்வழி இருட்டா யிருந்தது. போகப்போக உச்சியில் வானத்தில் மேகத்தில் மறைந்திருக்கும் சந்திரனுடைய பிரகாசம் கொஞ்சம் தெரிந்தது. பின்னாலிருந்து கேட்கும் காலடிச் சத்தத்தால் மற்ற மூவரும் கூடவே வந்துகொண்டிருக்கிறார்களென்று வாலிபனறிந்துகொண்டான்.

இவர்கள் படிக்கட்டுகளின் உச்சிக்குச் சென்றபோது அங்கு ஒரு பிரம்மாண்டமான கோயில் இருந்தது. அது பாழடைந்து கிடந்தது. ஆனால் அக்கோயில் வெள்ளைச் சலவைக் கற்களால் கட்டப்பட்டிருந்தது. அதிலிருந்த கம்பங்களில் பல உடைந்து சிறு துண்டுகளாகக் கீழே சிதறிக்கிடந்தன. ஆதலின் இருட்டில் முன்பின் அறியாதவர்கள் அங்கு செல்வது ஆபத்திற்கிடமாகும்.

16-வது அத்தியாயம்.

அதிசயமான காட்சி — மாயசிங்கன் தவறு — இரகசியக்கூட்டம் — வில்வநாதன்மேல் அபாண்டக் குற்றம் — அவனுக்குப் பிராணுபத்து நேர்தல்.

அந்தக் கோயில் மிக்க நீளமாய் இருந்தது. அதன் பக்கச் சுவர்களில் வெடிப்புகளுண்டாகி யவற்றிற் சிறுசெடிகள் முளைத்திருந்தன. அங்கு ஆந்தைகள் கோட்டான்கள் கூவிக்கொண்டும் வௌவால்கள் பறந்து கொண்டுமிருந்தன. ஆகவே அது ஒரு பயங்கரமான ஸ்தலமேயென்று கூறத்தகும். அக்கோயிலின் கோடியில் ஒரு பலிபீடம் இருந்தது. அந்த இடம் அப்போது தான் அலங்கரிக்கப்பட்டதுபோல் தோன்றியது. வாலிபன் மிக்க வியப்போடு அங்கு உற்று நோக்கினன். கீழே உயர்தர ஜமக்காளம் விரிக்கப்பட்டு பலி பீடத்தின்மேல் பட்டுச் சேலை போடப்பட்டிருந்தது. அதன் பின் பக்கச் சுவரில் ஒரு அழகிய திரைச்சேலை தொங்கிக்கொண்டிருந்தது. பட்டு மெத்தைகள் தைக்கப்பட்ட பெரிய நாற்காலிகள் ஐந்தாறு அப்பீடத்தைச் சுற்றிப் போடப்பட்டிருந்தன. அப்பீடத்தின் தலைப்பில் சற்று மேடான விடத்தில் சிம்மாதனம்போ லலங்கரிக்கப்பட்ட ஒரு பெரிய ஆசனம் போடப்பட்டிருந்தது. இவை யாவற்றையும்விட அம்மேடைமேல் ஒரு பக்கம் வைக்கப்பட்டிருந்த ஒருவித இராஜமுடியும், செங்கோலும் ஓர் வாளுமே நமது வாலிபனுக்குப் பேராச்சரியத்தை விளைவித்தது. மெழுகு வத்திகளின் பிரகாசத்தில் அந்த இடம் மனதிற்கு ஒருவித அச்சத்தை யுண்டாக்கத்தக்கதாயிருந்தது.

இங்கு ஏதோ அதிசயமும் இரகசியமுமான ஆலோசனை நடக்கிறதென்று வாலிபன் மனதிற்பட்டது. ஆனால் அது என்னவாக விருக்கலாமென்பதுமட்டும் சற்றும் அவன் மனதிற்குப் புலப்படவில்லை. அவன் அதற்கு மேலும் பேசாதிருக்க முடியாமல் தன்கூட விருப்பவனை நோக்கி, "தயவுசெய்து இனியேனும் நான் எங்கே இருக்கின்றேன்? என்னையேன் பிடித்துவந்தீர்கள்? என்பதை யறிவிக்கவேண்டுகின்றேன்" என்றான்.

அதற்கு அம்மனிதன் வாய் பேசாமல் "நான் உனக்கு விடை யளிக்கலாகாது. என்கூடவிருக்கும் இவர்களைக் கேள்" என்பதுபோல் பின்னாலிருக்கும் மூவரையும் குறிப்பாய்த் திரும்பிப்பார்த்தான்.

நமது வாலிபன் அந்த ஆள்காட்டிய சமிக்கையின்படி பின்னாலிருந்த மூன்று பேரையும் திரும்பிப்பார்த்தான். அவர்களில் ஒருவன் மற்ற பேர்களைவிட நாகரீகமும் விலையுயர்ந்ததுமான உடையும், தலையணியில் மயிர்ப்பீலியும் இறகுகளும் அணிந்திருந்தான். அவனுக்கு வயது நாற்பதுக்குமேல் ஐம்பதுக்குள் இருக்கும். அவன் தேகம் கட்டுவிட்டுப் பலமுடையதா யிருந்தது. அவன் முகம் அழகுவாய்ந்து கம்பீரம் பொருந்தியதாயிருந்தது. கண்கள் விசாலமாய் கற்சுவரையும் ஊடுருவிப் பார்க்கத்தக்க தீட்சணியப் பிரகாசமுடையனவா யிருந்தன. அவன் முகத்தில் சுத்த வீரத்தன்மையும் சத்தியமும் பிரகாசித்தாலும் மூர்க்கம் பயங்கரம் முதலிய குறிகள் சற்றேனுமில்லை. அவன் முகத்தில் "நமது அதிகாரத்தைத் தடுப்போர் ஒருவருமில்லை" என்ற ஒருவித நம்பிக்கையும் பயமற்ற நிம்மதியுமான குறி தோன்றியது. அவனுடைய வாட்போன்ற மீசைகள் அவன் முகத்திற்கு மிக்க வனப்பை யளித்தன. இவ்வாறிருப்பினும் ஆழமான கிணற்றினடி

யில் ஒரு கல் விழுந்திருப்பதுபோல் அவன் மனதின் அந்தரங்கத்தில் ஒருவித வியாகூலம் இருந்துகொண்டிருக்கிறதென்று சூக்கும அறிவுடையோர் அவன் முகக்குறியாற் காணலாகும். அவன் தான் காணும் எவருடைய குணங்களையும் அவர்கள் முகத்தைப் பார்த்தவுடனே அறிந்து கொள்ளத்தக்க சாமார்த்திய முடையவன். நமது வாலிபன் அவனைச் சற்றுநேரம் நோக்கியதும் அவன்றான் மாய சிங்கன் என்று அறிந்துகொண்டான்.

வாலிபன் அவ்வாறு பார்த்துக்கொண்டிருந்தபோது, மாயசிங்கனும் வாலிபனை யுற்றுநோக்கினன். உடனே அவன் மனதில் மிக்க கலவரமும் கோபமும் தோன்றியது. அவன் உடனே ஆத்திரத்தோடு,

"அய்யோ கடவுளே! என்னமோ தவறு நேர்ந்துவிட்டது." என்று கூறியதும் வாலிபன் கரத்தைப்பிடித்து தீபத்தருகில் இழுத்துச் சென்று அவன் முகத்தை யுற்று நோக்கி "பேஷ்! இவன் அமரநாதம் பிரபுவேயல்ல. தவறுன ஆளைக் கொண்டுவந்துவிட்டோம்" என்றுன்.

மாயசிங்கன் ஆட்களில் ஒருவன் "அப்படியிருந்தும் தாங்கள் தானே முதலில் இவனைப் பிடித்தீர்கள்; நாணுவது கிருஷ்ணன் ஜக்கனுவது அமரநாதம் இராஜகுமாரரைக் கண்டவர்களல்ல" என்றுன்.

மாயசிங்கன்:—"அச்சுதா! பேசாமலிரு. இப்போது நான் குற்றத்தை யுங்கள்மேல் போடவில்லை. தப்பிதம் என்னுடையதே. என் கண்கள் ஏமாற மாட்டாவென்று நான் நம்பியிருந்தேன். ஆனுல் இவ்வாலிபன் முகம் ஏறக்குறைய அந்த இராஜகுமாரன் முகம்போலவே யிருந்தது என்னை மயக்கிவிட்டது. அதிலும் இவன் அரண்மனையிலிருந்து இரகசிய வழியாய் வெளி வந்ததால்" என்றுன்.

அச்சுதன்:—இது நமது துர்அதிஷ்டமே; நல்ல பரிசு கிடைப்பது கெட்டுப்போய்விட்டது. துஷ்டகேது இராஜகுமாரரும், நகரப்பிரதம குருவும் மற்றப் பிரபுக்களும் ஆவலோடு காத்துக்கொண்டிருப்பார்கள்.

மாய சிங்கன்:—"தவறு நேர்ந்ததாய் நான் இந்த வினாடி மட்டும் கருதியவனல்ல. எப்படியிருப்பினும் இன்று விவகாரம் தடைப்பட்டுவிட்டது. இனி இவ்வாலிபனைப்பற்றி அவர்கள் என்ன ஏற்பாடு செய்கிறார்களோ அறியவேண்டும். நீங்கள் இங்கேயே யிருங்கள்" என்று கூறிவிட்டு வாலிபனை வாவென்றழைத்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டான்.

அங்கிருந்த பலி பீடத்தின் பின் ஒரு பிரம்மாண்டமான கதவிருந்தது. அக்கதவில் ஒரு சிறு திட்டிவாசற்படி யிருந்தது. மாயசிங்கன் அதைத்திறந்து வாலிபனை யழைத்துக்கொண்டு அங்கிருந்த சிலபடிகளின் வழியாய்க் கீழிறங்கினான். அங்கு ஒரு அறை யிருந்தது. அந்த அறையின் மத்தியில் ஒரு பெரியதீபம் தொங்கவிடப்பட்டிருந்தது. அங்கே ஒரு பெரிய மேஜை போடப்பட்டு அதன்மேல் பொற்சரிகையால் வேலைசெய்த கரைகளையுடைய ஒரு பட்டுச்சேலை விரிக்கப்பட்டிருந்தது. அம்மேஜையைச்சுற்றி விலையுயர்ந்த நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அவற்றில் துஷ்டகேது இராஜகுமாரனும், நகரகுருவும் இன்னும்சில பிரபுக்களும் உட்கார்ந்திருந்தார்கள். யாவரும் மிக்க அலங்காரமான உடைகளை அணிந்திருந்தார்கள்.

மாயசிங்கனைக் கண்டதும் அவர்களனைவரும் மிக்க ஆவலோடு அவனை நோக்கினார்கள். ஆனால் அவன்கூட வந்திருக்கும் வாலிபன் முகத்தைக் கண்டதும் யாவரும் வியப்பும் மனச்சோர்வு மடைந்தார்கள்; துஷ்டகேது

மிக்க ஆத்திரத்தோடு தன் ஆசனத்திலிருந்து பாய்ந்து மாயசிங்கனருகிற் சென்று கோபத்தோடும் சந்தேகத்தோடும் அவனை நோக்கி "இதென்ன விந்தை?..." என்றான்.

மாயசிங்கன் மிக்க நிதானத்தோடு "என்ன வெனில் என் ஜன்மத்தில் இது ஒரு தவறு செய்துவிட்டேன். என் பதே. இதனால் தவறான ஆளைப்பிடித்து வந்துவிட்டேன்," என்றான். துஷ்டகேது "படுமோசம்" என்று கூவிக் கொண்டு ஆத்திரத்தோடு தன் வாளை யுருவிக்கொண்டு மிக்க கோபாவேசத்தோடு நோக்கினான்.

நகரக்குரு அவனை நோக்கி "என் புத்திரனே! இவ் விஷயத்தில் அவசரப்படவேண்டாம். மாயசிங்கன் நமது கட்சிக்குத் துணையாய்ச் சேர்ந்தவன், நம்மை மோசம் செய்கிறவனல்ல." என்று எழுந்து முன்னுக்கு வந்து கூறினார். துஷ்டகேது முரட்டுத்தனமாய் "அப்படி யிருந்தால் அவன் தன் யோக்கியதையைக் காப்பாற்றிக் கொள்ளட்டும்" என்றான்.

மாயசிங்கன் மிக்க நிதானத்தோடு குருவை நோக்கி "சுவாமிகள் என்னைப்பற்றி நல்ல அபிப்பிராயமளித்த தற்காக நான் மிக்க வந்தனமளிக்கிறேன். ஆனால் ஒரு சங்கதிமட்டும் கூற அனுமதி கேட்கிறேன். அதாவது, எவராவது என் யோக்கியதையைச் சந்தேகித்தால் அவர்களை யென் வாளுக்கிரையாக்கிப் பிணமாய் என் காலின்கீழ் வீழ்த்த ஆயத்தமா யிருக்கிறேன்" என்றான்.

குரு உடனே பீதியடைந்து துஷ்டகேதுவைக் கோபத்தோடு நோக்கிவிட்டு மாயசிங்கனை நோக்கி "வீரனே! துஷ்டகேது இராஜ குமாரர் குற்றமாய்க் கருதி யப்படிக் கூறியவரல்ல" என்றார். மாயசிங்கன் "அவரே யப்படிக் கூறிவிடட்டும். ஏனெனில் நான் ஒரு

வனே பூரண அதிகாரமுடைய எஜமானுகவும் தலைவனுக வும் இருக்கும் இடத்திலேயே ஒருவர்—அவர்கள் யாராக விருந்தாலும் சரி—என் யோக்கியதையைக் குற்றமாகக் கூறுவதை நான் சகித்துக்கொண் டிருக்க முடியாது'' என்ருன்.

இதைக்கேட்டதே யாவரும் நடுங்கிவிட்டார்கள், ஏனெனில் அவனை விரோதப்படுத்திக்கொண்டால் அவர் கள் காரியம் ஜெயமடையாது. அது மட்டுமல்ல; உடனே யவர்களுக்கே ஆபத்தாய் முடியும். ஆகையால் துஷ்ட கேது உடனே மாயசிங்கனை நோக்கி "நான் ஆத்திரப் பட்டு அப்படிக்கூறி விட்டதற்காக மிக்க விசனப்படு கிறேன். அது என் துர் அதிட்டம். என் முன்கோபம் ஒவ் வொரு சமயத்தில் என் உண்மை நேசர்களுக்கே என் மேல் வெறுப்பை யுண்டாக்கி விடுகிறது'' என்ருன்.

மாயசிங்கன் "இராஜ குமாரரே! போதும் இனி யிதை மறந்து விடுவோம். தாங்கள் செய்த ஏற்பாடா வது, தங்களிடம் இரவு பத்து மணிக்கு ஒரு இரகசிய சங் கதியைப்பற்றி பேசுவதற்காக யாருக்கும் தெரியாமல் வர வேண்டுமென்று தாங்கள் அமரநாதம் இராஜ குமாரர்க் குக் கடிதம் எழுதுவதென்றும், அவர் அவ்வாறு இரக சியமாய் அரண்மனையிலிருந்து வெளிப்பட்டதே நான் பிடித்துக்கொண்டு வரவேண்டுமென்றும் ஏற்பாடு. அதேப் படி என்னிடமுள்ள மிக்க நம்பிக்கையான ஆட்களில் மூவரை யழைத்துக் கொண்டுபோய் அரண்மனையிலிருந்து வெளிவரும் இரகசிய வழி யருகில் ஒளிந்திருந்தேன். குறித்தவேளைப்படி பத்தடித்ததே அங்கிருந்த கதவு திறக்கப்பட்டதும் இவ்வாலிபன் வெளியில் வந்தான். திடீலென்று பார்க்கும்போது இவன் அமரநாதம் இராஜ குமரர் போலவே பெரும்பாலு மிருக்கிருனே இல்லையோ

வென்பதை நீங்களே பார்க்கலாகும். உடனே இவன் பிடிக்கப்பட்டதும், எனது ஆட்கள் இவனைக் குதிரை மேலேற்றித் துரிதமாய் இங்கு கொண்டு வந்ததால் வழியில் இவன் முகத்தை நன்றாய்க்கவனிக்க எனக்கு அவகாசமேயில்லை. இங்கு வந்தபின் உங்கள் முன் இவனையழைத்து வரும்போதுதான் நன்றாய்ப்பார்த்தேன். உண்மையில் இத்தவறு நேர்ந்ததற்கு மற்ற யாவரையும் விட நான் மிக்க துயரடைகிறேன்'' என்றான்.

அங்கிருந்த பிரபுக்களில் ஒருவர் "சடங்கையின்றைக்கு நிறுத்திவைக்க வேண்டியதே. நமது மாயசிங்கன் அமரநாதம் இராஜகுமாரனை என்றைக்குப் பிடித்து வருகிறானே அன்றைக்குத்தான் இச்சடங்கு நிறைவேற வேண்டும்'' என்றார். மாயசிங்கன் "பிரபுக்களே! இன்னும் ஒருமுறை நமது துஷ்டகேதுப்பிரபு அந்த இராஜகுமாரரை அரண்மனையிலிருந்து வெளிவரும்படி செய்யட்டும். நான் மறுமுறை தவறாமல் அமரநாதம் இராஜகுமாரரைப் பிடித்து வருவது நிச்சயம்'' என்றான்.

துஷ்டகேது "இந்த வேலையை நாளையிரவு வைத்துக்கொள்வோம். இருபத்திநான்கு மணிநேர ஆலசியத்தால் அது கெட்டுப்போகாது. இதற்கிடையில் இவ்வாலிபனைப்பற்றி எப்படி நடந்து கொள்வது?'' என்று அவனை நோக்கினான். குரு "இங்கு நடந்திருக்கும் விஷயங்கள் இவனுக்குத் தெரிந்திருக்கிறவரையில் நம்மனைவர்க்கும் பெரிய ஆபத்தை யுண்டாக்க அது போதுமானது. இவனை வெளிவிட்டால் நமது காரியம் அடியோடு கெட்டுப்போகும்'' என்றார்.

இதைக்கேட்ட வாலிபன் சட்டென்று தன் நிலைமையை யுணர்ந்து "சுவாமி! இங்கு நடக்கும் சங்கதி

எதுவாயினும் அது எனக்கு அறிவிக்கப்படவேண்டு மென்று கருதப்பட்டதல்ல. மேலும் நானும் வலிய அதை யறிந்துகொள்ள வேண்டுமென்று இங்கு வரவில்லை யென்பது நீங்களறிந்த விஷயமே. ஆகையால் எனக்குச் சம்பந்தமில்லாத இவ்விஷயத்தைப்பற்றி நான் பிரஸ்தா பிக்கும் குணமுடையவனல்ல. ஒருகாலும் அப்படிச் செய்யவே மாட்டேன்" என்றான். குரு "ஆயினும் முன் பின் னறியாத புது மனிதன் வார்த்தைகளில் நாங் கள் நம்பிக்கை வைக்கிற வழக்கமில்லை" என்றார்.

துஷ்டகேது "இருக்கட்டும். நான் இவனை யெங்கோ பார்த்திருப்பதாய்த் தோன்றுகிறது" என்றான். வாலி பன் "நான் தங்கள் மாளிகைக்கு வந்திருந்தபோது இரண்டு மூன்று முறை அங்கு தங்களைக்கண்டிருக் கிறேன்" என்றான். துஷ்டகேது "என்ன வேலையாய் வந் திருந்தாய்?" என்று கேட்டதற்கு வாலிபன் "எனக்கு அங்கு வேலை யொன்றுமில்லை. தங்கள் தாயாராகிய வணக்கத்திற்குரிய சீமாட்டியைத் தரிசிக்கவே அங்கு வரு வது வழக்கம்" என்றான். துஷ்டகேது "ஓகோ நீ என் தாயாரின் தர்ம கைங்கரியத்திற்காக இருக்கும் காரியஸ் தர்களில் ஒருவனுக்கும்" என்றதற்கு வாலிபன் ஆம் என் றான்.

துஷ்டகேது:—சரி, நீ என்ன வேலையாய் அரண்மனைக் குச்சென்று அங்கிருந்து இரகசியவழியாய் வெளி வந்தாய்?

வாலிபன்:—பிரபுவே! அந்த விஷயத்தைப்பற்றி நான் ஒருவார்த்தை கூட கூறக்கூடாது.

துஷ்ட:—"அதைக்கூறமறுப்பது உனக்குப் பிரதிகூல மாகவே முடியும். நீ அரண்மனைக்குள் சென்ற வரையில் உயர்ந்த அந்தஸ்திலுள்ளவர்களில் ஒரு

வரையே காணச்சென்றிருக்கவேண்டும். அந்த விஷயம் காதல் அல்லது இராஜாங்கத்திற்குச் சம்பந்தப் பட்டதாகவே யிருக்கவேண்டும். இன்றேல் இரகசிய வழியாய் வர உனக்கு அனுமதி கிடைத்திராது. நீ அந்த விஷயத்தைக் கூறியே தீரவேண்டும்." என்று அதிகாரத்தோடு கூறினன்.

வாலிபன்:—"பிரபுவே! மறுபடி கூறுகிறேன். அந்த விஷயத்தைப்பற்றி நான் வாய்திறக்கவே முடியாது" என்முன். ஏனெனில் அரண்மனையில் தான் சந்தித்த அம்மாதின் மேல் அவனுக்கு வெறுப்பும் மிக்க தாழ்ந்த அபிப்பிராயமுமே யிருந்தாலும் ஒரு ஸ்திரீ யின் மானத்தைப் போக்கடிக்கும் வேலை செய்யலாகாது, அதனுல் நமக்கென்ன தீங்கு நேர்ந்தாலும் நேரிடட்டும் என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டான்.

துஷ்டகேது "அடே பெட்டை மூஞ்சிப் பயலே நீ கூறும்படி செய்கிறேன் பார்" என்று ஆத்திரத்தோடு எழுந்து அவன் அருகிற் சென்முன். வாலிபன் "இந்தப் பரிசுத்தமான விடத்தில் நீ இம்மாதிரி கூறுவது மரியாதை யல்ல" என்முன். துஷ்டகேது ஆ துஷ்டப்பயலே உன்னைத் தண்டிக்கவேண்டியதே என்று கோபத்தோடு கூறிக்கொண்டே அவனுடைய கரத்தைத் தொடப் போனுன். வாலிபன் தேகம் உடனே நடுக்கமுற்றது. அவன் திடுதிடுப்போடு இரண்டடி பின்னிடைந்து "பிரபுவே! பத்திரம் என்னைத்தொடாதே, தொடாதே!" என்று கூறிக்கொண்டே தன் மடியிலிருந்த ஈட்டியை யெடுத்துக்காட்டி "என்னைத்தொட்டால் தட்சணம் இந்த ஈட்டியால் குத்திவிடுவேன்" என்முன். அப்போது அவன் முகத்தில் ஒருவிதப்பயமடைந்த குறி தோன்றியது.

வாலிபன் ஈட்டியைக் காட்டியதைக்கண்டதே துஷ்டகேது "சே! ஒரு நாய்க்குட்டிமேல் சிங்கம் தன் கையை நீட்டாது" என்று கூறிக்கொண்டே திரும்பித் தன் ஆசனத்தை நோக்கிச்சென்றான். வாலிபன் முகத்திலுண்டான கலவரத்தையும் பீதியையும் கண்டதே மாயசிங்கனும் மற்றபேர்களும் அவன் பயங்காளி என்று எண்ணிக்கொண்டு அவனைப் பரிதாபமான பார்வையாய் நோக்கினார்கள்.

துஷ்டகேது தன்னை நாய்க்குட்டியென்று கூறியதே வாலிபன் முகத்தில் குபீலென்று இரத்தம் ஏறியது "அவன் துஷ்டகேதுவை உற்று நோக்கி "ஓ இராஜகுமாரனே! நானல்ல நாய்க்குட்டி, நீயே நாய்க்குட்டியென்று உன் முகத்தின் முன்பே கூறுகிறேன். இது பரிசுத்தமான ஸ்தலம். இதைவிட்டு இப்போதே வேறிடத்திற்கு வருவாயாகில் யார் நாய்க்குட்டி என்பதைக்காட்டச்சித்தமாயிருக்கிறேன்" என்றான். வாலிபன் மொழிகளைக்கேட்டதே யாவர்க்கும் அவன் மேல் சற்று நேரத்திற்கு முன் இருந்த அபிப்பிராயம் அடியோடு மாறி வியப்புண்டாயிற்று. மாயசிங்கன் அவனையுற்று நோக்கி "மிக்க அதிசயம். இவன் ஒரு ஆச்சரியமான வாலிபனே" என்றான்.

துஷ்டகேது வாலிபனை நோக்கி, நீயார் என்றான். வாலிபன் "என் பெயர் வில்வநாதன் என் பெற்றோர் யாரென்று எனக்குத் தெரியாதெனினும் என் தேகத்தில் உயர்குல இரத்தம் ஓடுகிறது மட்டும் உண்மையென்று அறிவிக்கப்பட்டிருக்கிறேன்" என்றான். துஷ்டகேது நீ எங்கிருப்பது என்று கேட்டதற்கு வாலிபன் "நான் தலைமை வைத்தியராகிய டாக்டர் தங்கவேலுப்பிள்ளையின் வீட்டிலிருப்பவன்" என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதே அங்கிருந்த அனைவர்க்கும் முகத்தில் மிக்க விகாரமான மாறுதலுண்டாயிற்று. அவர்கள் முகங்களில் திகிலும் கோபமும் மிக்க வெறுப்பும் தோன்றின. குரு துஷ்டகேதுவை நோக்கி "பிரபுவே! நமது முயற்சி இன்னும் குழந்தைப்பருவத்திலேயே இருக்கிறதென்று இந்த இரவு நேர்ந்த சம்பவங்களாற் தெரிகிறது. இப்போது இவ்வாலிபனால் நாமனைவரும் தூக்குமரத்திற்குக் கொண்டுபோகப்படக்கூடிய நிலைமையிலிருக்கிறோம்."

துஷ்டகேது:—"ஆம் ஆம். தாங்கள் கூறுவது முழு உண்மையே. இவன் அரண்மனையின் இரகசிய வழியாய் வந்ததாலேயே இவன் தங்வேலுப்பிள்ளையின் ஆள் என்று நன்றாய்த்தெரிகிறது. இவன் என் தாயிடம் ஒரு காரியஸ்தனாயிருப்பது போல் அபிநயம் செய்து கொண்டு அங்கு வருவது உளவுகளையறிந்து கொண்டு போவதற்கே. இவன் ஒரு இரகசிய உளவாளியே" என்றான்

இதைக்கேட்ட வாலிபன் மிக்க திகிலடைந்து, "இது பொய். நான் அத்தகைய இழிவான தொழிலுக்கு ஒரு போதும் உடன்படுகிற சுபாவமுடையவனல்ல" என்று உறுதியாய்க் கூறினான்.

குரு "வாலிபனே, வீணாக எங்கள் கண்களை மூடப் பார்ப்பதில் ஒருபயனுமில்லை. நீ எங்கள் எதிரிகளின் உளவாளியே என்று நன்றாய்த் தெரிகிறது. சந்தேகமேயில்லை" என்றார். அதற்குள் அங்கிருந்த ஒரு பிரபு "ஆகையால் இவன் வேவுகாரன் கதியையே யடைய வேண்டும்" என்றான்.

துஷ்டகேது மாயசிங்கனை நோக்கி " நீ இவனைக் கொண்டுபோய் பத்திரப்படுத்து. இவனை யெப்படி

பொழிப்பதென்று சீக்கிரத்தில் கூறுகிறேம்'' என்றுன். மாயசிங்கன் உடனே இரகசியமும், மிக்க விசேஷமுமான விவகாரங்களிலெல்லாம் தனக்கு நம்பிக்கையான உதவி களாயிருக்கும் கிருஷ்ணன், ஜக்கன், அச்சுதன் என்ற தன் ஆட்களே யழைத்து, "இவ்வாலிபனே யழைத்துச் சென்று மிக்க பத்திரமாய் நமது அறையில் வையுங்கள். அனுவசியமாய் அவனே முரட்டுத்தனமாய் நடத்தாதீர் கள். அவனுக்கு ஆகாரமும் ஒயின் சாராயமும் கொடுங் கள். பாபம் அவன் ஜீவியகாலம் மிகக் கொஞ்சமே யிருக்கிறது. ஆ! ஒன்றும் கேட்கவேண்டாம். எல்லாம் பின்னுல் கூறுவேன்'' என்றுன்.

அவ்வாறே அவர்கள் மூவரும் வில்வநாதனே யழைத் துச் சென்ருர்கள். இப்போது அவ்வாலிபன் பெயர் நமக்குத் தெரிந்து விட்டதால், அவன் டாக்டர் தங்க வேலுப்பிள்ளேயிடம் அவனுடைய தமையனுல், வளர்ப் பதற்காகச் கொண்டுவந்து விடப்பட்டவனென்றும், அவனே நமது கதையின் ஆரம்பத்தில் ஆன்மநாதம் பிரபுவுக்குப்பிறந்த புத்திரனென்றும் நண்பர்கள் அறிந்து கொண்டிருப்பீர்களென நம்புகிறேம். வில்வநாதனேப் படிக்கட்டுகளின் வழியா யழைத்து வந்து நீண்ட ஒரு சுரங்கம் போன்ற பாதையே யிட்டுக்கொண்டு சென்ருர் கள். அவ்வழியில் சலவைக் கல் கம்பங்களின் உடைந்து போன துண்டுகள் எங்கும் கிடந்தன. வழியில் தீபமில் லாததால் மிக்க இருளாக விருந்தது. வழி யறியாதவர் கள் அங்கு சென்ருல் இடறி விழுந்து அல்லது கம்பங்கள் முதலியவற்றில் மோதிக்கொண்டு ஆபத்திற்குள்ளாக வேண்டியதே.

அச்சுரங்கத்தின் கோடியில் ஒரு சிறிய பலமான கத விருந்தது. அச்சுதன் அதைத் திறந்து வில்வநாதனே

அங்கிருந்த அறைக்குள் செல்லவிட்டு, "இங்கிரு, நான் சீக்கிரத்தில் ஆகாரமும் தீபமும் கொண்டு வருகிறேன்." என்று கூறிச் சென்றான். அவன் கதவை மறுபடி மூடித் தாளிட்டுச் சென்றதை யறிந்ததே வில்வநாதன் பேரிடி விழுந்தவன் போலாகிவிட்டான். அவன் கண்களுக்கு ஒன்றும் புலப்படவில்லை. ஆகையால் ஒரு அடி அப்புறம் நகரவும் பயமுடையவனாகி கால் வைத்தவிடத்திலேயே நின்றுகொண்டிருந்தான். பத்து நிமிடங்கள் கழித்து அச்சுதன் திரும்பி வந்து ஆகாரமும் தீபமும் கொண்டு வந்து கொடுத்துவிட்டு உடனே கதவை மூடித்தாளிட்டுக்கொண்டு சென்றான்.

வில்வநாதன் உடனே அந்த அறையின் நாற்புறங்களையும் நோக்கினான். அது ஒரு மிகச் சிறிய அறை. முழுதும் கருங்கல்லால் கட்டப்பட்டது. அந்த அறையொரு சவப்பெட்டி போல் அவனுக்குத் தோன்றியது. அவன் மனதில் பெரிய கலவரமுண்டாயிற்று. இது காறும் ஆச்சரியமான திடுக்கிடும் விஷயங்கள் ஒன்றன் பின் ஒன்றாகச் சரசரவென்று சம்பவித்ததால் அவன் சிந்திப்பதற்கே அவகாசமில்லை. இப்போது யாவும் சிந்திக்கலானான். தான் கிழவியால் அழைத்துக்கொண்டு போகப்பட்டவிடம் அரண்மனை யென்று தெரிந்தது. "அப்படியாயின் அந்தக் கெம்பீரத் தோற்றமுடைய மாது யார்? அவள் நமது கையிலுள்ள மச்சத்தைக் கண்டதும் அப்படிப் பயமும் விகாரமும் மாறுதலும் அடைவானேன்? அவள் நமது கரத்தின் மேல் பாகத்தைப்பார்க்க விரும்பியதேன்? நமது பயங்கரமான இரகசியத்தைப்பற்றி யவளுக்கேதேனும் சந்தேகமுண்டோ? இப்போது நாம் மாயசிங்கன் கூட்டத்தாரிடம் சிக்கிக் கொண்டிருக்கிறோம். இங்கு ஏதோ மிக்க பயங்கரமான

சதியாலோசனை நடக்கிறது என்பது உண்மை. இன்றேல் அந்தச் சிம்மாதனமும் கிரீடம் முதலியவைகளும் ஏன் இங்கே வைக்கப்பட்டிருக்கின்றன? குரு ஏன் வந்திருக்கிறார்? யாவரும் உயர்ந்த நாகரீகமான உடைகளை யணிந்திருப்பானேன்? இதன் விவரம் என்னவோ சற்றும் நமக்கு விளங்கவில்லை'' என்று இவ்வாறு ஒவ்வொன்றைப் பற்றியும் சிந்தித்தான். ஆனால் ஒரு விஷயமேனும் சற்றேனும் அவனுக்கு விளங்கவில்லை. அச்சமயம் தன் தற்கால நிலைமை நினைவிற்கு வந்தது. தன்னை யொரு உளவாளியாக நினைத்துவிட்டார்கள். இதன்றி டாக்டர் தங்கவேலுப்பிள்ளையை மாயலிங்கன் முதல் அனைவரும் கொடிய விரோதியாகவும், வெறுப் போடும் மதிப்பது வில்வநாதனுக்குப் பெரிய வியப்பாக விருந்தது. ஏனெனில் அவன் மிக்க அடக்கத்தில் இருப்பவன். ஆகையால் டாக்டரின் குணம் நடக்கைகளில் யாவரும் புகழும் நல்ல பாகங்கள் மட்டுமே அவனுக்குத் தெரியுமன்றி, அவருடைய கபடம், சூது, அக்கிரமங்கள் பாதகச்செல்கைகள் இவற்றில் ஒன்றுமே அவன் அறியான். ஒருவன் தான் வேவுகாரனுடைய கதியை யடையவேண்டும் என்று கூறினன். மாயசிங்கன் தன் ஜீவியகாலம் மிக்க கொஞ்சமே யிருப்பதாகக் கூறினன். இவையாவும் சிந்திக்க நாம் இங்கேயே கொல்லப்படுவோம். அதுவும் சீக்கிரத்தில் என்று அவன் மனதிற்பட்டது. அந்தோ! உயிரின்மேல் ஆசை யாருக்குத் தானிராது! எவ்வளவு இழிவான ஜன்மமெடுத்தவர்களாயினும் எவ்வளவு சகிக்க முடியாத தரித்திரத்தை யனுபவித்துக்கொண்டிருப்பவர்களாயினும், தீரா வியாதியுடையோராயினும் உயிரின்மேல் வெறுப்புடையவர் ஒருவருமேயில்லை. ஒருவனுக்குத் தன் ஆன்மாவின்

மேலிருக்கும் ஆசையைப்போல் வேறெதின்மேலுமிராது. ஆன்மாவிற்காக வேறெதையும் கைவிடுவான்.

நமது வில்வநாதனுக்கோ இன்னும் சரியாய்ப் பத்தொன்பது வயது பூரணமாகவில்லை. அவன் மனதில் சகிக்கொணாத ஒரு கொடிய துக்கம் இருந்தபோதிலும், கடவுளுடைய பெருங்கருணையில் பூரண நம்பிக்கை வைத்தவனானதால் ஒவ்வொரு சமயங்களில் "கடவுள் நமது பெருங்குறையை நீக்கிவிடுவார். நம் பிறப்பைப்பற்றிய உண்மை வெளிப்பட்டு நாம் உலகில் சுகமனுபவிப்போம்" என்று கருதுவதற்குத் தக்க காரணமிருக்கிறது. அப்படியிருக்க அவன் வாலிபமனம் எத்தகைய வேதனையடைந்திருக்குமென்பதை யிதை வாசிப்போரே சிந்திக்கலாகும்.

வில்வநாதன் இத்தகைய துயரமான சிந்தனையிலிருந்தானே யொழிய அங்கு வைத்திருந்த ஆகாரத்தையவன் தொடவேயில்லை.

17-வது அத்தியாயம்.

வில்வநாதனுடைய அரியகுணங்கள்—மாயசிங்கன் பெருந்தன்மையும் அவனுடைய வாக்குத்தத்தமும்—கோலக்களம்—மாயசிங்கன் அன்பு—அதிசய சம்பவங்கள்—வில்வநாதன் பிராணபத்து நீங்கியது—அதிசயமான ஊதுகுழலும் அந்தரங்க நட்பும்.

சுமார் ஒருமணி நேரங்கழிந்ததும் வில்வநாதன் இருக்கும் அறையின் கதவு திடீலென்று திறக்கப்பட்டதும், மாயசிங்கன் உள்ளே வந்தான். வில்வநாதன் அவனைக் கண்டதும் தட்டென்றெழுந்தான். அவன்

முகத்தைக்கண்டதும் வாலிபன் திகிலடைந்தான். ஏனெனில் அவன் முகத்தில் தனக்குப் பிரியமில்லாத ஒரு வேலையை விதியின்றிச் செய்ய மனதைத் தைரியப் படுத்திக்கொண்டு மிக்க பரிதாபமான பார்வையுடையவன் போன்ற குறியிருந்தது. ஆகையால் அவன் மாயசிங்கனை நோக்கி,

"நீ துக்கசமாசாரமே கொண்டு வந்திருக்கிறு யென்று கருதுகிறேன். அது எவ்வளவு துயரமானதாயிருந்தாலும் கூறிவிடு. கலவரத்தைவிட அது என்ன சங்கதியாயிருந்தாலும் நான் தைரியத்தோடு கேட்டுக் கொள்வேன்'' என்றான்.

மாயசிங்கன் அவன் மொழிகளைக் கேட்டு மகிழ்வடைந்து, "அப்படியாயின் நீ மரணத்திற்கு முன் தைரியமாய் நிற்பாயோ?'' என்றான். வில்வநாதன் "ஆகா! தடையின்றி நிற்பேன். ஏனெனில் மனிதர் என் தேகத்தை மட்டுமே அழித்து விடலாம். ஆனால் என்றுமழியாத என் ஆன்மாவை யிவர்கள் ஒன்றும் செய்யமுடியாது. பரமதயாநிதியாகிய பரம்பொருளே அதைக் காப்பாற்றுகிறவன். அவன் கருணையில் பூரண நம்பிக்கையுடைய நான் மரணத்திற் கஞ்சேன்'' என்றான்.

மாயசிங்கன் "இன்னம் ஒரு மணி நேரத்தில் நீ மரணமடையவேண்டும். நகரகுரு உனக்குப் பிரார்த்தனை செய்வதற்காக வருவார்'' என்றான்.

இதைக்கேட்டதே வில்வநாதன் கண்களில் கோபத் தணல் வீசிற்று. அவன் ஆத்திரத்தோடு கள்ளத்தலைவனை நோக்கி "என்ன? நீதி இன்றி என்னைக்கொல்லத் துணிந்த கொலை பாதகரில் ஒருவனு அச்சமின்றி துணிகரத்தோடு என்கூடக் கடவுளைப் பிரார்த்திக்க வருகிறுன். ஒருகாலும் உதவாது. என் கடைசி காலத்தை நானே

தனியாய்க் கழிப்பேன். நான் பூரணமாய் நம்பியிருக்கும் அக்கருணா நிதியை நானே மனதாரப் பிரார்த்தனை செய்வேன்'' என்றான்.

இவனுடைய சுத்த வீரத்தன்மையும் பரிசுத்தமான மனதையும் உணர்ந்த மாயசிங்கன் மனம் கரைந்துவிட்டது. அவன் வில்வநாதனை நோக்கி, "வாலிபனே! உன்னைக் கொல்லவேண்டும் என்று அவர்கள் செய்த தீர்மானத்தில் நான் சம்பந்தப்பட்டேன் என்று கருத வேண்டாம். நான் டாக்டர் தங்கவேலுப்பிள்ளையை மிக்க அதிகமாய் வெறுப்பதினால் அவனைச் சேர்ந்தவர்கள் மேலும் வெறுப்பையே காட்டுவேன் என்று கருதத் தக்கதாயினும், இந்த விஷயத்தில் நான் அவர்கள் தீர்மானத்திற் சம்பந்தப்படவில்லை. ஆயினும் நான் உன்னைக் காப்பாற்றிவிட நினைக்க முடியாது. அவர்கள் கையில் நான் வாக்குத்தத்தத்தால் கட்டுப்பட்டவனாயிருக்கிறேன்'' என்றான்.

வாலிபன்:—"நீ இதைக்கூறியதற்காக நான் மனப்பூர்வமாய் வந்தன மளிக்கிறேன். நீ தங்கவேலுப் பிள்ளைமேல் அத்தகைய வெறுப்படைந்திருப்பதன் காரணம் என்ன?'' என்றான். மாயசிங்கன் உடனே ஒருவித ஆத்திரமடைந்து மனத்துடிப்போடு "அதைக் கேட்காதே! அந்த சங்கதியைப் பற்றி பேசவேண்டாம் ஆ! கடவுளே! எனக்குச் செய்யப்பட்ட அக்கிரமங்களையும், நான்பட்ட கஷ்டங்களையும் நினைத்தால்...ஆனால் நான் வீணாய் உனக்கிருக்கும் கொஞ்சகாலத்தை வீண் போக்கிவிடுகிறேன். ஒருமணி நேரங்கழித்து நான் திரும்பி வருவேன்'' என்றான்.

வாலிபன்:—"ஆம். என்னைக் கொலைக்களத்திற் கழைத்

துச்செல்ல. எத்தகைய மரணம் விதிக்கப்பட்டிருக்கிறது ?'' என்றான்.

மாயசிங்கன் மனமிளகி “சுத்தவீரனுக்குத்தக்கபடி சிரச்சேதத்தால் மரணமடையும்படி—வாலிபனே ! இப்போதேனும் உன் மரணத்தின் பின்னேனும் நான் உனக்குச் செய்யத்தக்கது ஏதேனுமுண்டோ ?'' என்றான்.

வில்வநாதன் அவனை யுற்றுநோக்கி “ஆம் என் கடைசி காலத்தில் எனக்கு மனோ நிம்மதியை யுண்டாக்கத்தக்க ஒரு உதவி நீ செய்யக்கூடும். அதனால் இந்த அக்கிரமத்தால் என் மனம் படும் வேதனை அரைபங்கு குறைந்துவிடும்.'' என்றார்.

மாயசிங்கன் “ஆ, உனக்கு அவ்வளவு சகாயம் செய்யக்கூடுமாயின் நான் மிக்க சந்தோஷமடைவேன்'' என்றான். வாலிபன் “நீமட்டும் வாக்குத்தத்தப்படி நடப்பாய் என்று நான் நம்பக்கூடுமானால்...'' என்றதே,

மாயசிங்கன்:—“வாலிபனே ! நான் இப்போதிருக்கும் நிலைமையினாலேயே வாக்குத்தத்தத்தை மதித்து நடப்பவனல்லவென்று கருதி விடாதே. நான் கடவுள் ஒருவருண்டென்றும், மறுமை யென்பதொன்றுண்டென்றும் நம்புகிறவன். நாளைக்கு மரித்தபின் நான் ஆண்டவன் சந்நிதானத்தின் முன் நிற்கும் போது நான் முதலில் மிக்க யோக்கியனாகவும், ஜீவகாருண்ய முடையவனாகவும், குற்ற மற்ற சத்தியவானாகவும் இருந்தேனென்று ஆண்டவனறிவார். எனக்கு நேர்ந்த அக்கிரமமான தடுக்கமுடியாத சம்பவங்களால் நான் இந்த நிலைமைக்கு வரும்படி பலவந்தப்படுத்தப்பட்டேன். ஆண்டவனே தக்க சமயத்தை யளிக்குமட்டும் இதினின்றும் திரும்ப வழியில்லை. நான் பூரணமாய் மேற்கண்டபடி கட

186489

வுள் என்னை மன்னிப்பார் என்று நம்பியிருப்பதால் சத்தியமாய்க்கூறுகிறேன். என் வாக்குத்தத்தப் படி நடக்க ஒருபோதும் தவறமாட்டேன் நீ நம்பிக்கையாய்க் கூறலாம்'' என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதும் வாலிபன் முகத்தில் ஒருவிதச் சந்தோஷக்குறி தோன்றியது. அவன் மாயசிங்கனை நோக்கி "அப்படியாயின் கூறுகிறேன் கேள். என்னைக் கொலை செய்யும் இடத்திற்கருகில் நல்ல விரகுகளால் தீ யெரிக்கவேண்டும். அதற்கருகில் வேறு போதுமான உலர்ந்த விரகுகள் ஆயத்தமாய் வைத்துக்கொண்டிருக்க வேண்டும். நான் கொலை செய்யப்பட்டதே என் தேகத்தை யெடுத்து அத்தீயில் போட்டு விட்டு மேலே உலர்ந்த விரகுகளைப்போட்டுத் தீயை நன்றாயெரித்து என் தேகத்தைச் சாம்பராக்கி விடவேண்டும். நான் சொல்வதன் கருத்தென்னவெனில் என் தேகத்தை யொருபூதரும் தீண்டலாகாது. என் சட்டையைக்கூட ஒருவர் தொடலாகாது. ஒருவரும் எக்காரணத்திற்கும் என் தேகத்தில் ஒரு விரலைக்கூட வைக்கலாகாது. நான் சவமாய் வீழ்ந்ததே என் தேகம் எரித்து விடப்படவேண்டும்'' என்றான்.

வாலிபன் மொழிகளைக்கேட்ட மாயசிங்கன் நீ கூறியவையாவும் அறிந்துகொண்டேன். அவ்வாறே கட்டாயம் செய்வேன் என்று சத்தியம் செய்கிறேன். ஆ! உன்னைக் காப்பாற்றிவிடக் கூடுமானால்......ஓ வாலிபனே நான் உனக்கு இன்னும் செய்யக்கூடியது ஏதேனுமிருந்தாலும் சொல். அவசியம் செய்கிறேன்'' என்றான்.

வாலிபன் "ஆ உன் வாக்குத்தத்தத்திற்காக நான் மிக்க நன்றியோடு வந்தன மளிக்கிறேன். ஆனால் கடவுளே யதற்கு ஈடுசெய்யவேண்டும். நீ எனக்குச் செய்

யத் தக்க உதவி இன்னுமொன்றுண்டு. அதாவது நான் இறந்துபோன சங்கதியை டாக்டர் தங்கவேலுப்பிள்ளைக்குத் தெரிவித்து விடவேண்டும். ஒரு கடிதத்தில் 'வில்வநாதன் இறந்து போய் விட்டான். இது சத்தியம்' என்று மட்டும் எழுதி யனுப்பிவிட்டால் போதும். எந்த விடத்தில் எப்படி என்ன காரணம் என்ற விவரம் ஒன்றுமே எழுதவேண்டிய அவசியமில்லை. இவ்வளவே நான் கோரிக்கொள்வது'' என்றான்.

மாயசிங்கன் தான் அவ்வாறே செய்வதாய் மறுபடிச் சத்தியம் செய்ததே வில்வநாதன் சந்தோஷத்தோடு அவனுக்கு மறுபடி வந்தனமளித்து விட்டு. "சரி இனி நீ போய் முன்னடியாகத் தீமூட்டிவிட்டால் உன் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றத்தொடங்கி விட்டாயென்று மிக்க சந்தோஷமடைவேன்'' என்றான். மாயசிங்கன் மனங் கசிந்து அவன் கரத்தைப்பற்றிக் குலுக்கிவிட்டுச் சென்றான்.

வில்வநாதன் அதன்மேல் அறையில் உட்கார்ந்து கடவுளைச் சற்றுநேரம் துதித்துக்கொண்டிருந்து தன் கழுத்திலணிந்திருந்த பொற்சங்கிலியைக் கரத்திலெடுத்து, "ஆ நீ கூடவே பிறந்த நண்பனை யொத்திருக்கிறாய், நீ என்னை விட்டு ஒரு வினடியேனும் பிறிந்ததேயில்லை. உன்னில் ஏதோ தெய்வவல்லமை யிருக்கிறதென்றும் என் ஆபத்துகளை யெல்லாம் விலக்கி விடுவாயென்றும் கூறப்பட்டதை நான் நம்பியே யிருந்தேன். உன்னிடம் என் பிறப்பைப்பற்றிய இரகசியமர்மம் அடங்கி யிருக்கிறதென்று மட்டும் நான் அறிவேன். அது ஒரு நாளைக்கு உன்னால் வெளியாகுமென்று நம்பியிருந்தேன். இப்போது அந்த நம்பகம் போய்விட்டது. ஆயினும் என் ஆபத்தை நீக்கும் மகிமை யுன்னிட மில்லை

யென்று இப்போதுங்கூறத்திரமில்லை. உயிர் தேகத்தை விட்டு நீங்கிவிடும் வரையில் ஒருவித நம்பிக்கையிருக்கவே யிருக்கிறது. அடுத்தவினாடி பரமதயாநிதியாகிய பகவான் செயலால் என்ன நடக்குமோ யாரறிவர்! எப்படியாயினும் என் தேகமழிவதாயின் நீயும் கூடவே அழியவேண்டியதே'' என்று கூறிக்கொண்டே அதற்கு முத்தமளித்து அதை மறுபடி கழுத்தில் கட்டிக்கொண்டு ஆண்டவனைப் பிரார்த்தித்தான். நடந்த அக்கிரமங்களாலும் அவன் பிறப்பைப்பற்றிய விஷயத்தாலும் அவன் மனதில் வியாகூலமிருந்தாலும், ஒரு குற்றமும் செய்யாத பரிசுத்த உள்ள முடையவனாதலின் மரணத்திற்கு அவன் மனதில் அச்சமென்பது தோன்றவில்லை.

சற்று நேரங்கழித்து அவன் அறையின் கதவு திறக்கப்பட்டதும், கிருஷ்ணன், ஜக்கன், அச்சுதன் மூவரும் உள்ளே வந்தார்கள். அவர்கள் தன்னை யழைத்து கொண்டு செல்லவே வந்தார்களென்பதை யறிந்த வில்வநாதன் அவர்களை நோக்கி மலர்ந்தமுகத்தோடு "நண்பர்களே! என்னை யழைத்துப்போக நீங்கள் கொஞ்சங் கூடக் கஷ்டமெடுத்துக்கொள்ள வேண்டியதேயில்லை. நான் உங்களோடு கூடவே அமைதியுடன் வருகிறேன்'' என்றான்.

இவ்வாலிபனுடைய பயமற்ற தன்மையையும், சந்தோஷமான முகத்தையும் கண்ட மூவரும் ஆச்சரியமும், இரக்கமும் அடைந்தார்கள் வாலிபன் அவர்கள் கூடவே கொலை நடக்கப்போகும் இடத்தை நெருங்கியதும் அங்கு அப்போதே தீயெரிந்துகொண் டிருப்பதைக்கண்டு மாய சிங்கன் தன் வாக்குத்தத்தத்தைப் பூரணமாய் நிறைவேற்றுவா னென்றுணர்ந்தான். சிரச்சேதம் செய்யப்படும் கட்டைக்குமுன் அத்தொழிலுக்கு ஏற்படுத்தப்பட்ட

கள்ளரில் ஒருவன் கரத்தில் பிடித்த வாளோடு நின்றான். அதற்கு மறுபக்கம் சற்று தூரத்தில் துஷ்டகேது, குரு, மற்றப்பிரபுக்கள் யாவரும் நின்றார்கள். யாவர்க்குமப்புறம் தனியே மாயசிங்கன் கரங்களைக் கட்டிக்கொண்டு நின்றான்.

மாயசிங்கன் நிலைமையைக் காண்போர் கொஞ்சம் சூக்கும அறிவுடையோராயின், அவன் அங்கு நடக்கும் விவகாரங்களைச் சற்றும் விரும்பவில்லை யென்றும், அதைத் தடுக்கத் தனக்கிருக்கும் ஆவலை மிக்க கஷ்டத்தோடு அடக்கிக்கொண் டிருக்கிறனென்றும் நன்றாயறிந்து கொள்ளலாம்.

நெருப்பெரியும் சடசடவென்ற சந்தடி தவிர அங்கு வேறு ஒரு சந்தடியுமில்லை. நிர்ச்சந்தடியான அந்த விடத்தில் வில்வநாதன் முழங்காற்படியிட்டு கடவுளைப் பிரார்த்திக்கத் தொடங்கினன். இதுவரையில் ஏதோ சிந்தனையிலிருந்த மாயசிங்கன் உடனே அவ்வாலிபனை யுற்று நோக்கினன். வாலிபனுடைய சுத்த வீரத்தன்மையையும் அவன் பக்தியையும் இந்த வயதிலவனுக்கிருக்கும் உதாரமும் பெருந்தன்மையுமான குணத்தையும், மரணத்திற்கு அஞ்சாத அவனுடைய பரிசுத்தமான உள்ளத்தையும், அவன் அழகிய முகத்தையும் சிந்திக்கச் சிந்திக்க அவன் மனம் அனலிலிட்டமெழுகுபோல் இளகியது. ஆதலால் அத்தகைய வாலிபன்மேல் மிக்க இரக்கமும் அவனைக் கொல்ல வேண்டுமென்று அங்கு நின்றுகொண்டிருக்கும் துஷ்டகேது, குரு, மற்ற பிரபுக்கள் யாவர்மேலும் மிக்க வெறுப்பும் உண்டாயின. அடடா இத்தகைய வாலிபனை யநியாயமாய் இவர்கள் கொலை செய்வதை நாம் தடுக்காமலிருப்பது எப்படி யென்று ஆத்திரத்தோடு சிந்திக்கலானன்.

மாயசிங்கன் முகக்குறியால் துஷ்டகேது அவன்

மனோநிலைமையை யொருவாறு அறிந்துகொண்டான். அவன் உடனே மாயசிங்கனை நோக்கி "மாயசிங்கனே! அமரநாதம் இராஜகுமாரன் விவகாரத்தில் சம்பந்தப்பட்டவர்களெல்லாம் சபையோரில் அதிக எண்ணிக்கை யுடையோர் எப்படிக்கூறுகிறார்களோ அதன்படி நடக்க உடன்பட்டவர்கள் என்பதைமறவாதே" என்றான். மாயசிங்கன் "ஆ! அந்த ஒரு வாக்குத்தத்தமே என்னை இந்த அநீதமானக் கொலையைத் தடுக்காதபடி செய்கிறது. இன்றேல்...." என்று அதோடு நிறுத்தி விட்டான்.

ஏனெனில் அச்சமயம் வில்வநாதன் கடவுளைப் பிரார்த்தித்துக்கொண் டிருந்தவன் மனோ உற்சாகம் அதிகமாகவடைந்து தன் வார்த்தைகள் மற்ற மனிதர் செவிகளில் விழும் என்ற நினைப்பின்றி, "ஓ! பரமதயாநிதியாகிய பகவானே! என் கொலையாளிகளைத் தயவுசெய்து மன்னியும். அவர்கள் இப்போது மனம் மயங்கி நீதி யநீதி யறியாமல் நடக்கிறார்கள். ஆகையால் அவர்களை மன்னியும். முக்கியமாய் என் விஷயத்தில் இரக்கம் காட்டிய கம்பீரகுணமுடைய இந்த மாயசிங்கனை அகத்தியம் மன்னிக்கும்படி அதிகமாய்ப் பிரார்த்திக்கிறேன். அவன் ஏதோ பலவந்தத்தால் நன்னெறியிலிருந்தும் தடுமாறி விட்டிருக்கிறானதலால் கருணைபுரிந்து அவன் அறிவின் கண்களைத்திறந்து அவனை நேர்வழியில் திருப்பியருளும். இதுவே நான் முடிவாய்த் தங்களை வேண்டிக்கொள்வது ஓ பரம்பொருளே...." என்று பிரார்த்தித்துக்கொண்டே யிருக்கையில், மாயசிங்கன் தன் மனதிலுண்டான இரக்கத்தை யடக்கமுடியாதவனாய் மிக்க ஆத்திரத்தோடு ஆவேசம் வந்தவன் போல்,

"ஓ கடவுளே! இப்படுகொலையின் பாபத்தில் எனக்குப் பங்குவேண்டாம்" என்று முன்னுக்குப் பாய்

ந்து வில்வநாதனை நோக்கிச்செல்ல முயன்முன். அப்போது துஷ்டகேது அவன் தோளைப்பற்றினன். மாயசிங்கன் அவனை யுதரித்தள்ளிவிட்டு நேராய் வில்வநாதனருகிற்சென்று குனிந்து சட்டென்று அவனைத்தூக்கி, அவன் முகத்தில் விழுந்திருந்த உரோமங்களை விலக்கி, முகத்தைத்தடவிக்கொடுத்து "ஓ! பெருந்தன்மையான குணமுடைய நேர்த்தியான வாலிபனே! பயப்படாதே. என் உயிரேபோவதாயினும் உனக்கு எள்ளளவு தீங்கு கூட நேரிடும்படி நான் விடமாட்டேன்." என்முன்.

அச்சமயம் அவன் கண்களில் மிக்க தீக்ஷண்ணியமான ஒருவிதப் பிரகாசமுண்டாயிருந்தது. மாயசிங்கன் அவ்வாலிபன்மேல் இரக்கம் காட்டி அவனைக்காப்பாற்ற எண்ணிவிட்டான் என்பதை யறிந்ததே, கொலை செய்ய ஏற்படுத்தப்பட்ட மனிதன் உடனே தன் உடைவாளை யுறையிற் போட்டுக்கொண்டான். கிருஷ்ணன், ஜக்கன், அச்சுதன் மூவரும் சந்தோஷமான கூச்சலிட்டார்கள்.

ஆனல் துஷ்டகேது மிக்க கோபமடைந்து மாயசிங்கனை நோக்கி "ஓ தலைவனே! நீ இந்த அபாயகரமான வாலிபனை விட்டுவிட்டால் உன் வாக்குத்தத்தத்தைக் காப்பாற்முத அசத்தியவானுகவும் நம்பிக்கைத் துரோகியாகவும் கருதப்படுவாய்." என்முன்.

மாயசிங்கன் "என் வாக்குத்தத்தப்படி என் ஆட்களில் ஒருவனை யுங்களுக்குக் கொலையாளியாக அனுப்பும்படி நான் சம்பந்தப்பட்டவனல்ல. ஒரு சமயம் நீரே அக்கொலையாளியின் தொழிலை யேற்றுக்கொள்வீர் போலும்" என்று மிக்க வெறுப்போடு கூறினன்.

துஷ்டகேது மிக்க கோபாவேசம் கொண்டு "சே சே! நம்மையெல்லாம் தூக்குக்கனுப்பும்படி இவனை யொருபோதும் உயிரோடு விடலாகாது" என்று ஆத்

திரத்தோடு தன் கத்தியை நீட்டிக்கொண்டு பாய்ந்து போய் வில்வநாதனைக் குத்த முயன்றான். அச்சமயம் அவ் வாலிபன் மாயசிங்கன் ஆச்சரியச் செய்கையால் மிக்க வியப்படைந்து பிரமித்துவிட்டவன்போல் மரம்போல் நின்றுகொண்டிருந்தான். ஆனால் மாயசிங்கன் கண் இமைப்பதற்குள் தன் வாளை யுருவிக்கொண்டு துஷ்ட கேதுவின் குத்தைத் தடுத்துவிட்டு, மிக்க கோபத்தோடு, "ஓ கோழைப் பிரபுவே! அப்பால் போம்" என்றான்.

வில்வநாதன் மாயசிங்கனுக்கு வந்தன மளித்துவிட்டு அவன் கரத்திலிருந்த வாளைப்பிடிங்கிக்கொண்டு "இரத் தப் பிரியனாகிய இந்தப் பிரபுவுக்கு நானே பதில் கூற வேண்டும்" என்றான். மாயசிங்கன் சந்தோஷத்தோடு கத்தியை யளித்துவிட்டு "பேஷ்! வீரத்தன்மையுள்ள வாலிபன்" என்று கூறிக்கொண்டே வெட்டச்சென்று இருவர் சண்டையையும் நோக்கிக்கொண் டிருந்தான்.

இருவரும் வாட்போர் தொடங்கி ஐந்து நிமிடங் களுக்குள் துஷ்டகேது இராஜகுமாரன் வாட்போரில் தேர்ச்சி யடைந்தவனென்றும், வில்வநாதன் தேர்ச்சி யடையாமல் தன் புத்தி சாமார்த்தியத்தால் சண்டை செய்கிறானென்றும் மாயசிங்கன் அறிந்துகொண்டு, அவன் மேல் கண்ணோக்கமாயிருந்தான். துஷ்டகேது வாலி பனைக்கொன்று விடவேண்டுமென்று கோபாவேசத்தோ டும், மிக்க ஆத்திரத்தோடும் யுத்தம் புரிந்தான். வில்வ நாதனோ கொஞ்சம் தவறினால் பிராணனையிழப்போம் என்ற பயத்தாலும் நமக்கு அநுபோகமுமில்லையே யென்ற அச்சத்தாலும் தூண்டிற்காரன்போல் பொறுமை யோடு மிக்க ஜாக்கிரதையாய் எதிரியின் பாய்ச்சல் வீச்சு களையும் குத்துகளையும் கவனித்துச் சண்டை செய்தான். இதனால் துஷ்டகேதுவின் பயிற்சி பயன்படவில்லை. அவ

சரத்தால் எக்காரியமும் கெட்டுவிடும். கோபத்தால் எடுத்தக்காரியம் ஜெயமாகாது. கோபமும் ஆத்திரமும் ஒன்று சேர்ந்தால் எந்த காரியந்தான் கைகூடும்?

சுமார் கால்மணி நேரம் சண்டை நடந்தபின் துஷ்டகேது "இன்னும் இச்சிறு பயலைக்கொல்லாமலிருப்பதா!" என்று மிக்க கோபாவேசத்தோடு "அடே பேடிப் பயலே இதோடு போ எமனுலகம்!" என்று தன் வாளை யோங்கிக்கொண்டு அவன்மேற் பாய்ந்தான். மறுவினாடி வில்வநாதனுடைய சாமார்த்தியத்தால் துஷ்டகேதுவின் வாள் அவன் கரத்திலிருந்து தட்டப்பட்டு பறந்து போய் நெடுந்தூரத்தில் வீழ்ந்தது. அதேவினாடி துஷ்டகேது கால் இடறிப் பொத்தென்று கீழே வீழ்ந்தான். வில்வநாதன் உடனே ஜெயசீலனாகத் தன் எதிரியின் மார்மேல் ஒருகாலை வைத்துத் தன் கத்திமுனையை யவன் நெஞ்சில் வைத்தான்.

மாயசிங்கன் மிக்க சந்தோஷமடைந்து "பேஷ் மிக்க சுத்த வீரச்செயல். உத்தம வாலிபனே! உன் எதிரியாகிய இராஜகுமாரனை யெழுந்திருக்கவிடு. இவர் பெருந்தன்மை யுடையவராயின் உன்னைச் சினேகனாக்கிக் கொள்வார்" என்றான்.

வில்வநாதன் உடனே அவ்வாறே செய்யத் துஷ்டகேது எழுந்து நின்று "வாலிபனுடைய வீரச்செயல் மரியாதைக் குரியதே. இவன் வேவு ஆளல்லாவிட்டால் நமது கட்சியில் சேர்ந்துகொள்ளட்டும்" என்றான். வில்வநாதன் "பிரபுவே! நீரல்ல இப்போது எனக்கு நிபந்தனை கூறத் தக்கவர்" என்றான். இந்த உண்மையையும் நீதியையுமுணர்ந்த துஷ்டகேது கோபமடைந்தபோதிலும் தலை நாணி என்னமோ இரகசியம் பேசுபவன்போல் குரு அருகிற்சென்று பேசத்தொடங்கினான்.

மாயசிங்கன் வில்வநாதன் கரத்தைச் சந்தோஷத்தோடு பற்றிக்கொண்டு "இதுவரை நடந்த சம்பவங்களால் நீ களப்படைந்திருப்பாய் கொஞ்சம் சிற்றுண்டியருந்துவது அவசியமே. வா யென்கூட" என்று அழைத்துச்சென்றான். இருவரும் குகைக்குள் நுழைந்து செல்லும்போது மாயசிங்கன் வில்வநாதன் முன் இருந்த அறையை நோக்கிச் செல்லாது வேறு இடதுபக்கமுள்ள ஒரு வழியாயழைத்துச்சென்று அந்தச் சுரங்கத்தின் கோடியிலிருந்த ஒரு அறையின் கதவைத்திறந்து வாலிபனை யுள்ளே யழைத்துச் சென்றான்.

அந்த அறை நன்றாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சுவர்களின் ஓரங்களில் உயர்தரமான சரிகை வேலைசெய்த பட்டுத்திரைகள் விடப்பட்டிருந்தன. மேஜை நாற்காலிகள், வெள்ளிப்பாத்திரங்கள் யாவும் விலை யுயர்ந்தவைகளாகவே யிருந்தன. அந்த அறையின் மத்தியில் ஒரு வெள்ளித்தீபம் எரிந்துகொண்டிருந்தது. இவர்களிருவரும் உள்ளே சென்றதே அங்கு கீழே உட்கார்ந்திருந்த ஒரு வாலிபன் தட்டென்றெழுந்து மிக்க மரியாதையோடு நின்றான். அவனுக்கு வயது பதின்மூன்று பதினான்கிருக்கும். அவன் மிக்க அழகு வாய்ந்தவன். அவன் விலையுயர்ந்த உடைகளையே யணிந்துகொண்டிருந்தான். மாயசிங்கனுடைய கையாளாகிய அவன் பெயர் பூபாலன்.

மாயசிங்கன் அவனை நோக்கி "பூபாலா! நீ உடனே மேஜைமேல் உன்னிடமுள்ள முதல்தரமான ஆகாரங்களையும், உயர்தரமான ஒயினையும் கொண்டுவந்து வட்டி." என்றான். பூபாலன் ஒரு நொடிக்குள் நல்ல ஆகாரங்களை வட்டித்து ஒரு புட்டி சாராயமும் வெள்ளிக் கிண்ணங்களும் கொண்டுவந்து வைத்தான். மாயசிங்கன் மிக்க

உபசாரத்தோடு வில்வநாதனை விருந்துண்ணும்படி வேண்டினான்.

வில்வநாதன் சந்தோஷத்தால் கண்களில் நீர் துளிக்க மாயசிங்கன் தன் விஷயத்தில் காட்டிய இரக்கம், அன்பு முதலியவற்றிற்காகத் தன் நன்றி பொருந்திய வந்தனங் களை யளித்தபோது மாயசிங்கன்,

"ஓ உத்தமகுணமுடைய வாலிபனே! நீ பரிசுத்த மான உள்ளமும், பெருந்தன்மையும், சத்தியமும், வீர மும், கருணையும் உடையவன். நீ எனக்கு வந்தனமளிக்க வேண்டிய அவசியமேயில்லை. உன்போன்ற வாலிப னுக்கு மயிரிழை யளவு கெடுதியேனும் நேரிடவிடுவதைக் காட்டிலும் நான் எத்தகைய கோரமான கொலைக்கு வேண்டுமாயினும் உள்ளாவேன். என்னகாரணத்தாலோ என்னையறியாமலே உன்மேல் எனக்கு அன்புண்டாகி யிருக்கிறது. அந்த அன்பு ஒவ்வொருவினாடியும் அதிக மாகிக் கொண்டே யிருக்கிறது. இந்தா இன்னொரு கிண் ணம் ஒயின் அருந்து" என்றான்.

வில்வநாதன் போசன மருந்தி நெடுநேரமானதோடு, இடையில் அனுபவித்த பயம் திகில் ஆயாசம் இவற்றால் மிக்க பசி உடையவனாகவே யிருந்தபடியால் திருப்தி யாகப் போசனம் செய்தான். போசனம் செய்து முடிந் ததும் மாயசிங்கன், "உனக்குக் சீக்கிரம் நவீனபுரிக்கேகப் பிரியமாயிருக்குமென்று கருதுகிறேன். அப்படியாயின் உனக்குப் பிரியமானபோது செல்லலாம். ஆனால் என் வரையில் உன்னை இன்னும் நெடு நாட்களுக்கு, நீயாகப் போகிறேன் என்று கூறும் வரையில், என் விருந்தினனாக வைத்துக்கொண்டிருக்கவே மிக்க ஆவலுள்ளவனாக விருக் கிறேன்" என்றான்.

வில்வநாதன் மறுபடி மாயசிங்கனுடைய பேரன்பிற்

காக நன்றிபாராட்டி, "நண்பரே எனக்கும் இருக்கப் பிரியமே. ஆயினும் நான் உடனே நகரம் போய்ச்சேர வேண்டும். ஏனெனில் இங்கு நடந்த சங்கதிகளில் எள்ளளவேனும் நான் வெளியிடலாகாதாகையால், காலே அதிகநேரம் சென்று சேர்வேனேல் கேள்விகளுக்குவிடையளிக்கநேரிடும். அப்போது நான் அடியோடு பொய் கூறவேண்டிவரும். ஆகையால் விடியுமுன் போய் என் படுக்கையில் சயனித்துக்கொள்வதே நலம்" என்ருன்.

மாயசிங்கன் "நண்பனே, நீ இவ்வாறு வலிய இச்சங்கதிகளை யிரகசியமாய் வைத்திருப்பதாக வாக்களித்த உன் உதாரகுணத்திற்காக மிக்க வந்தனமளிக்கிறேன். உன் பிரியப்படியே நீசெல் ஆனல் நான் ஒரு சங்கதி மட்டும் கூறவேண்டியிருக்கிறது. அதாவது இப்போது நமது நாட்டில் இராஜாங்கம் இருக்கும் நிலைமையில் எந்த நிமிடம் என்ன ஆபத்து நேரிடுமோ தெரியாது. அத்தகைய சமயங்களில் உன்னுடைய சத்தியம், பெருந்தன்மை, குற்ற மற்ற நடக்கை இவைகளிலொன்றும் உன்னைக்காப்பாற்ற முடியாது" என்றதே வில்வநாதன் மிக்க வியப்படைந்து "என்ன நீ கூறுவது? உன் கருத்துதானென்னை" என்று மிக்க ஆவலோடு வினவினன்.

மாயசிங்கன்:—" நான் சொல்வதாவது நீ என்னை உன் அந்தரங்க நண்பனுகக் கருதுவதாய் வாக்குத்தத்தம் செய்யவேண்டும். எந்த சமயத்திலானுலும் சரி, உனக்கு உதவிவேண்டும்போது மாயசிங்கன் இச்சமயத்தில் நமக்கு உதவி செய்வானு? செய்ய அவனல் முடியுமா? என்று ஒரு யோசனையும் செய்யாமல் என் உதவியைக் கேட்கவேண்டும். சற்றும் தடுமாற்ற மடையவேண்டாம். மாயசிங்கன் விடுவிக்க முடியாத ஆபத்தான நிலைமையில் உன்னை

வைப்பதற்கு எத்தகைய மனிதராலும் முடியா தென்று நம்பு.'' என்றான்.

இம்மொழிகளைக்கேட்ட வில்வநாதன் மிக்க வியப் படைந்தான். "அடடா, ஒரு கள்ளக்கூட்டத்தின் தலை வனாக விருக்கும் இவனுக்கு இத்தகைய வல்லமை யெப் படியுண்டாகும். எப்படிப்பட்டவர்களையும் அடக்கி விடும் வல்லமை யுடையவன் போலன்றோ விருக்கிறது'' என்று சொல்லொணு வியப்பும் சந்தேகமும் அடைந் தான்.

வில்வநாதன் எண்ணங்களை யறிந்த மாயசிங்கன், "ஓ என் அன்பார்ந்த வாலிபனே! நான் உன்னை யேமாற்ற இப்படிக் கூறுவதாகவாவது, என் வல்ல மையை நான் அதிகமாய்க் கருதிக்கொண்டதாகவாவது எள்ளளவும் கருதவேண்டாம். இதோ இந்த ஊதுகுழ லைக்கெட்டியாய் ஒரு மைல் தூரம் கேட்கும்படியாக ஊது வாயா பார்'' என்று அருகிலிருந்த ஒரு அலமாரியைத் திறந்து அதிலிருந்து பொன்னிலலங்கரிப்பட்ட ஒரு சிறு ஊதுகுழலை யெடுத்து அவனிடமளித்தான். அதை வாங்கிப்பார்த்த வாலிபன் மாயசிங்கனை நோக்கி "நான் பல ஊதுகருவிகளில் பழகியிருக்கிறேன். இக்கருவி எவ் வளவு சத்தத்தைபுண்டாக்கக்கூடுமோ அவ்வளவு சத்தத் தையும் உண்டாக்க என்னால் முடியும்'' என்றான்.

மாயசிங்கன் "இதை நீ என் ஞாபகார்த்தமாக வைத்துக்கொள். இது எப்படிப்பட்டவர்களும் ஓர் ஆப ரணம் போல் அணிந்து கொள்ளத்தக்கது. இது விலை மதிப்புள்ளதென்பதற்காக நான் இதை யுனக்களிக்க வில்லை. மற்றபடி ஏன் அளிக்கிறேனென்றால், இது ஒரு சமயத்தில் உன் ஆபத்தை நீக்கத்தக்கது. உனக்கு ஒரு நண்பனுடைய உதவி வேண்டும்போது—பகலிலாயினும்

சரி இரவிலாயினும் சரி, நகரத்தின் மத்தியிலாயினும் சரி, அதன் ஓரத்திலுள்ள வெளிகளிலாயினும் சரி, அரசனுடைய அரண்மனைக்குள் ஒரு இரகசிய அறையிலாயினும் சரி, பயங்கரமான பெரிய சிறைச்சாலையின் மத்தியிலாயினும் சரி, எங்கிருந்தாலும் சரி, இந்நகரவட்டத்தின் பனிரெண்டு மைல் தூரத்திற்குள் எங்கிருந்தாலும் சரி, நீ இந்த ஊதுகுழலை மட்டும் கெட்டியாய் ஊதினால் உடனே உனக்கு உதவிவரும் என்பது சத்தியம்'' என்றான்.

வில்வநாதன் "ஆ மிக்க ஆச்சரியமான வீரபுருடனே, உன்னை யென் உயிருக்குச்சமதையான நண்பனாகக் கருதுகிறேன். இந்த ஊதுகுழலை நான் உபயோகிக்கச் சந்தர்ப்பம் நேரிடாவிட்டாலும் மிக்க கம்பீரமான அரிய குணங்களை யுடைய என் நண்பரின் ஞாபகார்த்தமாக இதை என் உயிருள்ளவரையில் பத்திரமாய் வைத்துக் காப்பாற்றுவேன்'' என்று அதைத் தன் இடுப்பிலிருந்த கச்சுப்பட்டையில் கட்டித் தொங்கவிட்டுக்கொண்டான்.

அதன் பிறகு இருவரும் அங்கிருந்து புறப்பட்டு வில்வநாதன் அங்கு அழைத்து வரப்பட்டபோது அவன் கண்களின் கட்டு அவிழ்க்கப்பட்ட இடத்திற்கு வந்தார்கள். அப்போது அங்கு மூவர் தவிர வேறுயாருமில்லை. மாயசிங்கன், கிருஷ்ணன், ஜக்கன், அச்சுதன் என்ற அம் மூவரையும் அழைத்து "நீங்கள் நமது நண்பரை அழைத்துச் சென்று நகரத்தில் விட்டு விட்டு நாளை யிரவு ஒன்பது மணிக்கு நான் வந்து உங்களோடு சேரும் வரையில் அங்கேயே யிருங்கள்'' என்று கூறிவிட்டு வில்வநாதனை நோக்கி "நண்பனே! எங்களுக்குள் ஒரு சட்டமிருக்கிறது. அதை நான்கூடத் தவறி நடக்கலாகாது. அதாவது எங்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் தவிர மற்ற

பேர் யாராயினும் அவர்களுக்கு இங்குவரும் இரகசிய வழியைக் காட்டலாகாது. ஆகையால் இப்போது உன் கண்களைக் கட்டிவிடவேண்டும்'' என்றான்.

வில்வநாதன் "நண்பரே! எனக்காக உங்கள் விதிகளில் எதுவும் விலக்கப்படவேண்டாம்" என்றான். மாயசிங்கன் அவனை நோக்கி "நண்பனே! ஆயினும் உன் வரையில் இது ஒரு வீண் சடங்கே. ஏனெனில் என் உயிரையும் என் ஆட்கள் அனைவர் உயிரையும் உன் கரத்தில் பூரணமாய் நம்பி யொப்பித்து விடுவேன். எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது இனி நீங்கள் புறப்படலாம். கடவுள் உனக்குப்பூரண ஆசீர்வாத மளிப்பாராக'' என்றான்.

மறுவினடி வில்வநாதன் கண்கள் கட்டப்பட்டு அவன் ஒரு குதிரைமேலேற்றப்பட்டான்; மற்ற மூவரும் தங்கள் புரவிகளின் மேலேறிக்கொண்டு அவனையழைத்துக்கொண்டு நகரை நோக்கிப்புறப்பட்டார்கள். ஒரு மணிநேரத்திற்குள் அவர்கள் ஒரு இக்கட்டுமின்றி நகரத்தைச் சேர்ந்தார்கள்.

18-வது அத்தியாயம்.

சதியாலோசனையும் அமரநாதம்பிரபுவும்—அமரநாதன் இரகசியமாய் முடிசூட்டப்படல்—அரண்மனையில் அரசியின் அயோக்கிய பரிவாரம்—அவர்களுடைய இரகசிய சம்பாஷணையும் ஆலோசனையும்—ஆபத்தின் மேல் ஆபத்து—"எமக் கூத்து."

மறுநாள் இரவு சுமார் பத்தரை மணி யிருக்கும். அவ்வேளையில் முன்னாள் போலவே மாயசிங்கன் வாசஸ்தலத்தில் துஷ்டகேது, குரு முதலிய அதே ஆட்

கள் கூட்டம் கூடியிருந்தார்கள். இரவு மிகப்பயங்கரமா யிருந்தது. அவர்கள் இருந்த பாழடைந்த கட்டிடத்தில் கோட்டான்களும் ஆந்தைகளும் கூவிக்கொண் டிருந்தன. வானத்தில் கரியசூற்கொண்ட மேகங்கள் நிறைந்து பயங் கரமான சத்தங்களை யுண்டாக்கிக்கொண்டிருந்தன. அங் குள்ளவர்களெல்லாம் யாருக்காகவோ எதிர் பார்ப்பவர் கள் போல் மிக்க ஆவலோடு வாயிற்படியைப் பார்த்துக் கொண் டிருந்தார்கள். கடைசியில் கதவு திறக்கப்பட்ட தும் மாயசிங்கன் அமரநாதம் இராஜகுமாரனை யழைத் கொண்டு உள்ளே வந்தான். முன்னாள் வில்வநாதனை யங்கு அழைத்து வந்தபோது, அவன் இருந்தது போல் சாந்தமாகவும் தைரியமாகவும் அமரநாதன் இல்லை. அவன் முகம் சவம்போல் வெளுத்து தேகம் நடுங்கிக் கொண் டிருந்தது. அவன் மாயசிங்கன் ஆட்களால் பிடிக் கப்பட்டபோது தப்பித்துக்கொள்ள முயன்றபடியால் அவன் உடைகளனைத்தும் நலங்கி மாசுபடிந்திருந்தன. துஷ்டகேது அவசரத்தோடு எழுந்து அவனருகிற்சென்று "என் அன்பார்ந்த சகோதரரே! பயப்படவேண்டாம். இங்குள்ளவர்களெல்லாம் உனது நண்பர்களே" என்று கூறிக்கொண்டே அவனை யழைத்துப்போய் ஒரு ஆசனத் திலமர்த்தி கொஞ்சம் திராக்ஷச் சாராயம் ஒரு கிண்ணத் தில் விட்டு அவனை யருந்தச்செய்தான்.

அதன் பிறகு அமரநாதன் சற்று மனம் தேறி "அப் படி யானால் எனக்கு நேர்ந்த தொந்திரவுகளுக்கெல்லாம் காரணம் உமது தந்திரமான ஆலோசனை தானா?" என் றான். துஷ்டகேது "சகோதரரே! உமது பிரஜைகளில் மிக்க பக்தி யுடையவனாக விருக்கிறேன் என்று காட்டிக் கொள்ளும் என் மேல் தாங்கள் கோபிக்கலாகாது." என்று மதுரமான மொழிகளாற் கூறினான். அவற்றைக்

கேட்ட அமரநாதன் "பேஷ்! குடிகள். யாருக்குப் பிரஜை கள்? முடிதரித்த மன்னனன்றோ பிரஜைகளை யுடைய வன். நான் மன்னனுமல்ல, எனக்கு முடியும் தரிக்கப்பட வில்லை" என்றான்.

துஷ்டகேது "ஆனால் நீர் அரசனாகப்போகிறீர். ஆகவே வேண்டும். அதுவும் இந்த இரவே. அவசியம் ஆகவே வேண்டும்" என்றான். அமரநாதன் மிக்க வியப் படைந்து "ஓ குருவே! பிரபுக்களே! என்ன சங்கதி? நீங் கள் செய்யும் ஆலோசனை தானென்ன? நான் எங்கே இருக்கிறேன், இம்மனிதன் யார்?" என்று மாயசிங்கனை யச்சத்தோடு நோக்கினான். துஷ்டகேது "இந்த இடம் உன் காரியசித்திக்காகத் தங்கள் உயிரை விட ஆயத்த மாய் இருக்கும் ஆயுதந்தரித்த வீரர்களால் காக்கப்படு கிறது. இம்மனிதன் அவர்கள் தலைவனான மாயசிங்கன்." என்றதே. அமரநாதன் மிக்க வியப்போடு "என்ன நாம் எவ்வளவோ ஆச்சரியமான விஷயங்களைப்பற்றி யெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோமே அக்கள்ளர் தலை வனா?" என்றான்.

துஷ்டகேது "அவனைக் கள்ளர்தலைவன் என்று அழைத்தால் அழையும் ஆனால் பூரண ஆயுதந்தரித்த வீரர் களோடு உமக்காக உயிரைத் தத்தம்செய்ய ஆயத்தமாக விருக்கும் நம்பிக்கையான நண்பனாகக் கருதும். இப் போது எல்லா ஏற்பாடுகளும் நடந்திருக்கிறது. நமது ஜகத்குரு இந்த இரவு நடக்கவேண்டிய சடங்கைத் தமது பிரதிநிதியாயிருந்து நடத்தும்படி நமது நகரகுருவாகிய இவருக்குக் கட்டளை யனுப்பியிருக்கிறார்......" என்றதே, அமரநாதன்:—ஆத்திரத்தோடு "அச்சடங்கு?" என்றான்.

துஷ்டகேது:—"தாங்கள் இந்த நாட்டிற்கும் இதைச்

சேர்ந்த தீவுகள் முதலியயாவற்றிற்கும் அரசராக முடி சூட்டப்படவேண்டிய சடங்கே'' என்றான்.

அமரநாதன்:—''உனக்கு மிக்க வந்தனமளிக்கிறேன், குரு சுவாமிகளே! பிரபுக்களே உங்களுக்கெல்லாம் நன்றி யோடு வந்தனமளிக்கிறேன். ஆயினும் என் நன் மைக்காக நடக்கும் விவகாரத்திற்கு என்னை யிப் படிக் கள்ளனைப் பிடிப்பதுபோல் பிடித்து வருவா னேன்?'' என்றான்.

துஷ்டகேது:—''தங்கள் பகைவருக்காக அச்சப்பட்டு ஒரு சமயம் தடுமாற்ற மெய்துவீரென்றெண்ணியே யிப் படிச் செய்ய நேர்ந்தது'' என்றான்.

அமரநாதன் முன்பே அரசனாய்விட்டவன்போல் பெருமையோடும் அகங்காரத்தோடும், ''சட் சட். நீங்கள் எண்ணியது தவறு. நான் அடையவேண்டிய பட்டத்தை யடைய முயற்சி செய்யாமல் பேசாமலிருக்கிறேனென்று கருதினீர்கள்? இல்லையில்லை. நான் என் சகோதரனுக்கு அனுப்பியிருக்கும் கடிதத்திற்குப் பதில் வருமட்டும் ஒன் றும் செய்யலாகாதென்றிருந்தேனே யன்றி வேறில்லை. இப்போது நீங்கள் இவ்வளவு சிரத்தையோடு செய்யும் ஏற்பாடுகள் என்றால் ஆலசியப்படுத்தவேண்டாம். ஆகை யால் நான் பூரணமாய் என்னை யுங்களிடம் ஒப்பித்துவிட்டு, உங்கள் ஆலோசனைப்படி நடக்கச் சம்மதிக்கிறேன். ஆனால் ஒன்று, அதாவது என்னைக் காப்பாற்றவும், என் கொடிய பகைவனாகிய அந்த டாக்டர் தங்கவேலுப்பிள் ளையை யுடனே யழித்துவிடவும் போதுமான பலம் உங்க ளிடமிருக்கிறதா என்பதைமட்டுமே யறிய விரும்புகி றேன்'' என்றான்.

துஷ்டகேது ''சகோதரரே! எல்லா விஷயங்களையும் விவரமாய்க் கூறினால்தான் உமக்கு விளங்கும். இப்

போது பூரணமாய் ஆயுதமுஸ்தீப்புகளோடு மூவாயிரம் பலமான வீரர்கள் இச்சூரனுகிய மாயசிங்கன் அதிகாரத்தின்கீழிருந்து இவனுல் நடத்தப்பட்டுத் தங்களுக்காகப் பிராணனைத் தத்தம்செய்ய ஆபத்தமா யிருக்கிறுர்கள். நமது ஜகத்குரு முன்கூறியபடி இக்குருவுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறுர். இவர் தக்க சாக்ஷிகளின் முன்னிலையில் தங்களுக்கு முடிசூட்டியவுடனே இச்சங்கதியை இரகசியத்தில் வைத்துக்கொண்டு பிரதமகுருவுக்குச் சமாசாரத்தை யனுப்பவேண்டும். அவர் உடனே தமது ஏற்பாட்டை யமுலுக்குக் கொண்டுவரும்பொருட்டுத் தமது சேனையின் ஓர் பகுதியை யனுப்புவார். அச்சேனை நமது நாட்டு எல்லைப்புறத்தை நெருங்கும் சங்கதியைக் கேட்டதே நமது கொடியைப் பறக்கவிட்டு ஒரு சமிக்கை செய்துவிட்டால் மறு நிமிடமே மாயசிங்கன் தன் மூவாயிரம் வீரர்களோடு வந்து சேர்ந்துவிடுவான். இன்னும் ஆயிரக்கணக்கான பேர் தமது கொடியின்கீழ் வந்து குழுமிவிடுவார்கள். இராஜதானி நகரை யொருவினுடியில் கைப்பற்றிக் கொள்ளலாம். இதற்குள் குருவின் சேனைகளும் வந்துவிடும். அதன்பிறகு ஜனகாம்பாள் இராணியின் கட்சியாரை யொரு நொடியில் அடக்கிவிடலாம். அதோடு நீர் கூறியபடி டாக்டர் தங்கவேலுப்பிள்ளையை முதல் பலியாக வைக்கலாம்'' என்றுன்.

அமரநாதன் ஆத்திரத்தோடு "இரண்டாவது பலியாக அந்தப் பத்மநாயகியை வைக்கவேண்டும்'' என்றுன். இதுகாறும் மௌனமாகவே யாவும் கேட்டுக்கொண்டிருந்த மாயசிங்கன் சட்டென்று நிமிர்ந்துநின்று "பிரபுவே! நாங்கள் மாதர்களின் இரத்தத்தைச் சிந்தும் வழக்கமில்லை'' என்றுன். துஷ்டகேது அமரநாதன் எங்கே மாயசிங்கன் வார்த்தையை மறுத்து அவனேடு

சச்சரவு உண்டாக்கிக்கொள்வானோ வென்றஞ்சித் துரிதமாய் "ஆம் ஆம் ஸ்திரீகளுக்கு மரியாதை காட்டவேண்டும். எனக்கும் அதுவே பிரியம். இன்னொரு விஷயம் இப்போது டாக்டர் தங்கவேலுப்பிள்ளைக்கு நண்பனாகவிருக்கும் அமிர்தநாயகம் பிரபுவை மெதுவாய் நமது கட்சிக்கு இழுத்துக்கொள்ளவேண்டும்; அதற்காக நான் ஒரு சூழ்ச்சிசெய்தேன். அதாவது நான் அவர் புத்திரியை மணம்புரிய பிரியப்படுவதாய் அவருக்கொரு கடிதம் எழுதினேன். ஆ! அதற்குப் பதில் அவர் எழுதிய அகௌரவமான கடிதத்தை நினைத்தால் என் தேகத்திலுள்ள இரத்தம் கொதிப்பெடுக்கிறது. ஆகா! ஆயினும் இருக்கட்டும் இப்போது நமது காரியம் பழுதாகாமல் நிறைவேறுவதன்பொருட்டு இச்சடங்கு முடிந்ததே அவரவர்கள் தனித்தனி வீடுபோய்ச் சேரவேண்டும். குருவின் சேனை எல்லையோரம் வந்து சேருமட்டும் இச்சங்கதி வெளியிடப்படலாகாது. விடியுமுன் அவரவர்கள் வீடு சேரவேண்டும். நம்மேல் சந்தேகம் உண்டாகும்படி நடந்துகொள்ளலாகாது. இரவு நெடுநேரமாய்விட்டது. இனியும் ஆலசியம் செய்யாமல் நமது சடங்கைத் தொடங்க ஆலயத்திற்குள் செல்லவேண்டியதே. தயவு செய்து யாவரும் புறப்படுங்கள்" என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதே மாயசிங்கன் துரிதமாய் அறையின் கதவுகளைத்திறந்துவிட யாவரும் புறப்பட்டு நாம் முன்கூறிய கோயிலில் அலங்காரம் செய்யப்பட்டிருந்த பலிபீடத்தினருகிற் சென்றார்கள். கிருஷணன் ஜக்கன், அச்சுதன் மூவரும் மிக்க உயர்தரமான உடைகளையணிந்துகொண்டு கரங்களில் பிடித்த வாட்களோடு அங்கிருந்த சிம்மாதனத்தின் பின்னால் நின்றார்கள். மாயசிங்கனும் அவர்களருகில் ஒருபக்கமாய் நின்றான். ஜம்

பது வீரர்கள் அவ்வாறே நல்ல அழகிய உடுப்புகளை யணிந்துகொண்டு கரங்களில் வாட்களை யேந்தி வில்போல் அரைவட்டமாய் எதிரில் நின்றார்கள்.

அமரநாதன் சிம்மாதனத்தில் அமர்த்தப்பட்டான். துஷ்டகேது அவன் பக்கத்திலுள்ள ஆசனத்திலும் மற்றப் பிரபுக்கள் மற்ற ஆசனங்களிலும் அமர்ந்தார்கள். பலி பீடத்தின் இருபுறங்களிலும் தீபங்கள் ஏற்றப்பட்டன. சிறுவனாகிய பூபாலன் பொற்சங்கிலியில் மாட்டித் தொங்க விடப்பட்ட ஒரு கிண்ணத்தில் மிக்க இனிமையான மணந் தரும் தூபம்போட்டு அதை மெதுவாய் ஆட்டிக் கொண்டே கோயிலின் முன்பக்கம் நின்றான்.

அச்சமயம் மேகம் குமுரித் தடதடவென்று பயங்கர மான சத்தமிட்டது. காற்று மும்முரமாய் வீசிற்று. ஆந்தைகள் சத்தமிடவும் வௌவால்கள் நாற்புறங்களிலும் பறக்கவும் தொடங்கின. தீபங்கள் மங்கலாய் எரியத் தொடங்கின. சூழ்ந்து நிற்கும் வீரர்களின் சாயல்கள் அசையும் பேயுருவங்கள்போல் அமரநாதன் கண்களுக் குப் புலப்பட்டன. அவன் மனதில் ஒருவிதப் பீதியும் துயரமும் தோன்றியதும், அவன் எவ்வளவுதான் மன தைத் திடப்படுத்தினாலும் தன் முன் நடக்கும் காட்சி கள் தனக்கு ஏதோ ஆபத்து நேரப்போகிறதென்று காட்டும் பயங்கரமான அவசகுனங்களென்றே அவன் மனதிற்குப் புலப்பட்டது. அவன் மிக்க பீதியடைந் தான்.

அச்சமயம் குருவானவர் மந்திரத்தைச் சபித்துக் கொண்டே அவனருகிற்சென்றதால் அவன் மனம் அத் துயரமும் பீதியும் பொருந்திய நிலைமையிலிருந்து திரும் பியது. குரு அவன் அருகிற்சென்று அவர்கள் தேசாசா ரப்படி முடிசூட்டும் சடங்கைச்செய்யத்தொடங்கி, ஜகத்

குருவினால் ஆசீர்வதிக்கப்பட்டு அனுப்பட்ட தீர்த்தத்தை அமரநாதன் மேல் புரோக்ஷித்து, "இதோ ஜகத் குருவின் பரிசுத்தமான நாமத்தால் உன்னை அரசனாக ஆசீர்வதிக்கின்றேன்" என்று கூறிவிட்டு, அவர்கள் மதாசாரப்படி ஆண்டவனைப்பிரார்த்திக்கத் தொடங்கினர். இச்சடங்குகளை யெல்லாம் விவரிக்கத்தொடங்கின் நமது கதை யதிகமாக வளர்ந்து விடும் ஆகையால் சுருக்கமாய்க் கூறுகிறோம்.

அவர்கள் தேசவழக்கப்படி அமரநாதனுக்கு நவீன புரி இராஜ்ஜியத்திற்கு அரசனாக முடிசூட்டப்பட்டது. ஆனால் குருவானவர் கிரீடத்தை யெடுத்து ஆசீர்வாதத்தோடு அவன் சிரசில் சூட்டும்போது நாம் முன் கூறியபடி ஆந்தைகத்துதல் முதலிய அவசகுனங்கள் நேர்ந்தன. சடங்கு முடிந்தபின் யாவரும் அரசனுக்கு முடி சூட்டியதைக்கொண்டாட ஒயின் அருந்தியபின் ஏற்பாட்டின்படி அவரவர்கள் தனித்தனியாய்ப்பிறிந்து தத்தம் வீடுகளுக்குச்சென்றார்கள். மாயசிங்கனே அமரநாதனை யழைத்துச்சென்று அரண்மனை யருகில் விட்டு விட்டு வந்தான்.

* * * * *

* * * * * *

மேற் கூறப்பட்ட சம்பவங்கள் நடந்த இரண்டாவது நாள் இரவு சுமார் எட்டு மணி யிருக்கும். அப்போது அரண்மனையில் பத்மநாயகியின் அறையில் இராணி, இராகவன், பத்மநாயகி, இராணியின் தோழியாகிய சித்திராங்கி, இன்னும் பல நண்பர்கள் அனைவரும் உட்கார்ந்து சந்தோஷமாகச் சம்பாஷித்துக்கொண் டிருந்தார்கள். இராணி இராகவன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு சந்தோஷத்தோடு அவனை நோக்கியபடி யிருந்தாள். சித்திராங்கியினருகில் புண்ணியகோடிப்பிரபு என்ற ஒரு வாலி

பன் உட்கார்ந்திருந்தான். அவன் திரண்டசெல்வமுடையவன்; புராதனமான வமிசத்தில் பிறந்தவன். சித்திராங்கியின் குணங்களைப்பற்றியும் நடவடிக்கையைப்பற்றியும் முன்னமே கூறி யிருக்கிறேம். இப்புண்ணிய கோடிப்பிரபு அவளுடைய புதுக்காதலன். ஒரு இராணியிடம், இத்தகைய நடவடிக்கை யுடையவள் எங்கேனும் தோழியாயிருக்கலாமோ என்று இதை வாசிப்போர் கருதலாகும் அந்தோ அரசியின் நெருங்கிய நண்பர்கள் அனைவருமே அவ்வாருயின்—இன்னும் அரசியே யவ்வாருயின் அப்படி நிகழ்வது சாதாரணமே யாகும்.

இராணி சற்றும் மறைவின்றி இராகவனேடு கைகோர்த்துக்கொண்டு கேளிக்கையா யிருக்கிருள். இவர்களிருவரும் காதலர்களென்று யாவர்க்கும் தெரியும். பத்மநாயகியோ நெடுங்காலமாய் பிரதமடாக்டர் தங்கவேலுப்பிள்ளையின் வைப்பாட்டியா யிருக்கிருளென்று அவள் புத்திரனுகிய இராகவன் முதல் அனைவர்க்கும் எல்லா ஜனங்களுக்கும்—தெரியும். இச்சமயம் இவர்களோடு நல்ல பௌவனமும் அழகும் வாய்ந்த வேறு சில மாதர்களும் இருக்கிருர்கள். யாவரும் இராணியின் பரிவாரத்தைச் சேர்ந்தவர்களே. மிக்க அழகாய் அலங்கரிக்கப்பட்ட அம்மண்டபத்தின் ஓர்புறம் ஒரு மேஜைமேல் பல நாடுகளிலிருந்தும் வரும் உயர்தரச் சாராய வகைகளும் முதல்தரமான பழவகைகள் மிட்டாய் சிற்றுண்டி வகைகள் யாவும் ஏராளமாய் வைக்கப்பட்டிருந்தன. இவர்களனைவரும் அவரவர்கள் பிரியப்படி அருந்திக்கொண்டிருந்தார்கள். அச்சமயம் அவர்களுக்குள் கீழ்க்கண்ட சம்பாஷணை நடந்துகொண்டிருந்தது:—

சித்திராங்கி பத்மநாயகியை நோக்கி "டாக்டர் ஏது இன்னும் வரவில்லை" என்ருள்.

பத்மநாயகி:—நானும் அவரை யெதிர்பார்த்துக்கொண்டுதா னிருக்கிறேன். ஆனால் அவருக்கு இத்தகைய கேளிக்கை விஷயங்களெல்லாம் பிரியமில்லை.

சித்திராங்கி:—அன்று இங்கு வந்திருந்தபோது அவர் வேணுமென்றே அரசருடைய பிரேதம் வாசனை யூட்டப்பட்டபோது அதிலிருந்து ஒரு பிரகாசம் உண்டான விஷயத்தைப்பற்றி, வேண்டாம் வேண்டாமென்றாலும் அதையே கூறிப் பயமுண்டாக்கி விட்டார்.

புண்ணியகோடிப் பிரபு:—அவர் சாத்திரப்படி அத்தகைய காட்சி யுண்டானதற்குக் காரணங்கள் கூறினர். அவர் நல்ல சாத்திரவிற்பன்னர்.

பத்மநாயகி.—சாத்திர விற்பன்னரா! அவருக்குச் சமதையான நிபுணர் இவ்வுலகில் ஒருவருமே யில்லையென்பது திண்ணம்.

சித்திராங்கி:—ஆ! அவர் அந்தத்துஷ்டகேது இராஜகுமாரர் கொண்டுவந்தக் கள்ளமரண சாசனத்தை ஒன்றுக்குமுதவாத வெறுங் கடிதமாக்கிவிட்ட சாமார்த்தியம் மிக்க புகழ்ச்சிக்குரியதே.

பத்மநாயகி:—அவர் இரண்டு மூன்று இரசாயன மருந்துகளால் மைசெய்து அதனுல் அப்பத்திரத்தை யெழுதச்செய்தார். இரண்டுமூன்று மணிநேரத்திற்குள் அந்த மை மாயமாய் மறைந்துவிட்டது. அதே மாதிரி அக்கடிதத்தில் ஒருவிதமருந்து தடவப்பட்ட இடத்தில் அரக்குமுத்திரை போடப்பட்டதால் அது உருகிப்போய்விட்டது.

இவர்கள் இவ்வாறு சம்பாஷித்துக்கொண் டிருக்கையில் டாக்டர் தங்கவேலுப்பிள்ளை யங்கு வந்தார். அவருடைய முகம் மிக்க வாட்டமடைந்திருப்பதைக் கண்

டதே யாவரும் வியப்பும் ஆவலுமுடையவர்களானார்கள். பத்மநாயகி அவரைக்நோக்கி "உமக்கேதேனும் அசௌக்கியம் நேர்ந்திருக்கிறதோ? ஏன் இப்படி முகவாட்டமடைந்திருக்கிறீர்?" என்று வினவினாள்.

டாக்டர்;—"ஏனெனில் இது கேளிக்கையாயிருப்பதற்குத் தகுதியான காலமல்லவென்று விசனிக்கிறேன். நமது விரோதிகள் இரகசியமாய் ஆனால் மிக்க சுறுசுறுப்பாய் வேலை செய்கிறார்கள்." என்றார்.

இதைக்கேட்ட ஜனகாம்பாள் இராணி திடுக்கிட்டு இராகவன் கரத்திலிருந்த தன் கரத்தை வெடுக்கென்றிழுத்துக்கொண்டு "என்ன என்ன? நடந்தசமாசாரத்தைக்கூறும். ஆலசியம் செய்யவேண்டாம்" என்று மிக்க ஆவலோடு வினவினாள். டாக்டர் "மகாராணி! துஷ்டகேது, இராஜகுமாரன், நகரகுரு, இன்னும் சில பலமான பிரபுக்கள், இவர்களெல்லாம் ஒன்றாய்ச்சேர்ந்து சற்றும் அருகனல்லாத தங்கள் கணவனை இராஜனுக்கச் சதியாலோசனை செய்கிறார்கள். கள்ளர் தலைவனாகிய மாய சிங்கன் அவர்களுக்கு உடந்தையாயிருக்கிறான்" என்றார். இராணி ஆத்திரத்தோடு ஆனால் குடிகள் என்மேல் பட்சமுடையவர்களாக விருக்கிறார்கள். எனக்கு உங்களைப் போன்ற பலம் பொருந்திய சினேகிதர்களெல்லாம் இருக்கையில் எதிரிகளால் என்ன முடியும்?" என்றாள்.

டாக்டர் "முடிவில் அவர்கள் பூரண அபஜெயமேயடையும்படி செய்வேன். இப்போது நான் கூறப்போகும் சங்கதி மிக்க இரகசியமாக வைக்கபடவேண்டியது. ஆயினும் இப்போதிங் கிருப்பவர்களனைவரும் நமது நெருங்கிய நண்பர்களே. மற்றபேர் இந்த விடத்தில் சேர்க்கப்படுவதில்லை. ஆகையால் நான் எச்சரிக்கை செய்

யாமலே கூறுகிறேன். இன்னும் நடந்திருக்கும் சங் கதியை நான் பூரணமாய்க்கூறவில்லை. நற்காலமாய் அக் கள்ளர் கூட்டத்திலே நான் ஒரு வேவு ஆளை வைத்திருப் பதால் அங்கு நடக்கும் இரகசிய சங்கதிகளனைத்தும் எனக்குத் தெரிகிறது..." என்றதே, இராணி மிக்க கலவர மடைந்து "என்ன நடந்திருக்கிறது. எதையும் பூரண மாய்க் கூறிவிடும். சந்தேகமான கலவரத்தில் வைக்க வேண்டாம்" என்று துரிதமாய்க் கேட்டாள்.

டாக்டர்.—மகாராணி! ஜகத்குரு இங்நகர குருவுக்கு அதி காரச்சீட்டனுப்பி யிருக்கிறார். அதன்றி உதவிக் காக அவர்களுக்குச் சேனையும் அனுப்புவதாய் வாக் களித்திருக்கிறார். மூன்று நாட்களுக்கு முன் ஒரு இரவு நான் முன் கூறியவர்களெல்லாம் ஒன்று கூடி இரகசியமாய்த் தங்கள் கணவர்க்கு அரசனாக முடி சூட்டுச்சடங்கு நடத்தியிருக்கிறார்கள்" என்றார்.

இச்சங்கதியைக்கேட்டதே அங்கிருந்த அனைவரும் பேரிடி விழுந்தவர்கள் போல் ஆய்விட்டார்கள். இராணி யின் முகம் வெளுத்து விட்டது. இராகவன் மிக்க கோபா வேசங்கொண்டு "அந்தச் சதிக்காரக் கள்ளப்பயலாகிய அமரநாதனை யுடனே கொல்ல வேண்டும்" என்று கர்ச் சித்தான்.

டாக்டர்.—"வாலிபரே! அவசரம் வேண்டாம். உமது உற்சாகமும் இராஜ விசுவாசமும் புகழத்தக்கதே. நீர் கூறிய அபிப்பிராயமே இராணி முதல் அனைவ ருடைய உள்ளத்திலும் இருக்கிறதெனினும் ஆத்திரப் படலாகாது. இது அஞ்சத்தக்க பிரமாதமான ஆபத்தேயாயினும் நீங்கள் மட்டும் என் ஆலோ சனைப்படி நடப்பீர்களானால் நமது எதிரிகள் முடி வில் பூரணமான தோல்வி யடையும்படி செய்வேன்

என்று நான் வாக்குத்தத்தமளிக்கிறேன" என்றூர்.

இராணி:—நண்பரே! நாங்களனைவரும் தங்கள் அபூர்வ சாமார்த்தியத்தையும் அன்பையுமே பூரணமாய் நம்பியிருக்கிறோம். உம்மை வெல்ல எதிரிகளால் முடியாது. ஆயினும் நாமேன் நமது படை வீரர்களை யனுப்பி உடனே அந்தக் கள்ளக்கூட்டத்தை யடியோடழித்து விடலாகாது?" என்றாள்.

டாக்டர்:—அவர்களைத் தந்திரத்தாலேயே அழிக்கவேண்டும். மாயசிங்கனுடைய ஆட்கள் மூவாயிரத்திற்கு அதிகமாக நகரமெங்கும் பரவியிருக்கிறார்கள். அவர்களில்லாத இடமில்லை. அவனுடைய ஆட்கள் நமது சைனியத்திலும், நகரப்போலீஸிலும், அனேகம் பிரபுக்கள் வீட்டிலும், அரண்மனைக்குக் காவலாயிருக்கும் குதிரைப்படையிலும், அரண்மனை வேலைக்காரரிலுங்கூட எங்கும் இருக்கிறார்கள். ஆகையால் நாம் ஒரு படிதவறி ஆத்திரப்பட்டு விட்டோமோ பெரிய ஆபத்தாய் முடியும். இன்னும் எனக்குப் பூரணமான சமாசாரங்கள் கிடைக்கவில்லை. என்னுடைய உளவாளி அந்த மாயசிங்கனிடமே யிருந்தாலும் அவன் வாலிபன்; ஏககாலத்தில் எல்லாச் சங்கதிகளையும் கிரகித்துக்கொண்டு வர அவனாற்கூடவில்லை. ஆயினும் நீங்கள் மட்டும் அவசரப்படாமல் என் யோசனைப்படி நடப்பீர்களானல் எள்ளளவு ஆபத்துகூட நேராவண்ணம் நான் பார்த்துக் கொள்வேன். தந்திரமாகவே அக்கள்ளக் கூட்டத்தை யடியோடழித்து விடுவேன்" என்றார்.

இராணி:—"நான் பூரணமாகத் தங்களையே நம்பிக்கொண்டிருக்கிறேன். தங்கள் சாமார்த்தியம் எனக்குப்

பாதுகாப்பா யிருக்கிறவரையில் என் எதிரிகள் எனக்கு எள்ளளவு தீங்கு செய்யவும் இயலா தென்று நான் நன்கறிவேன்...'' என்பதற்குள்,

டாக்டர்.—“மகாராணி! இப்போது நமது பிரசித்தி பெற்ற நகரத்திற்கு நேரிடவிருக்கும் ஆபத்துகளை னைத்தையும் நான் இன்னும் பூரணமாய்க் கூறவில்லை. கடவுளே! என்ன பயங்கரமும் கோரமுமான ஆபத்து!'' என்றார்.

அங்கிருந்த அனைவரும் இதைக்கேட்டதும் மிக்க திகிலடைந்து “அய்யோ தெய்வமே! இன்னும் என்ன ஆபத்திருக்கிறது. யாவற்றையும் கூறிவிடும்'' என்று கூவினார்கள்.

டாக்டர்:—“அது ஒரு மிக்க அகோரமான கொள்ளை நோய். அந்நோய் ஏழை, செல்வவான், புத்திமான், முட்டாள், ஆண், பெண், சிறியோர், பெரியோர், என்ற வித்தியாச மின்றி யாவரையும் அழித்துவிடுகிறது. அது கிழக்கேயிருந்து மிகு துரிதமாய் வந்துகொண் டிருக்கிறது. இன்னும் இரண்டு மூன்று நாட்களில் நமது உன்னதமான நகரிற் பிரவேசித்துவிடும். அது குரு, நியாயாதிபதி, சாத்திர விற்பன்னர், சுத்தவீரர் ஆகிய எத்தகைய புத்தியும் தைரியமும் வல்லமையும் உடையோரையும் மயங்கச் செய்து அவர்கள் புத்தியைத் தடுமாறச்செய்து அவர்களுக்கு ஒருவித கோரமான வெறியை யுண்டாக்கி விடுகிறது. அப்போது அவர்கள் தங்கள் புத்தி சுயாதீனத்தை யடியோடிழந்து விகார ரூபிகளாய்த் தொண்டை வெடித்துப்போகும்படி ஒருவித மிருக சத்தம் போட்டுக்கொண்டு பேய்கள்போல் துள்ளிக் குதித்துக் கூத்தாடுவதும், ஒருவரோடொருவர் மிரு

கங்களைப்போல், கடித்துக்கொண்டும், நகங்களால் பீறிக்கொண்டும், தலையோடு தலை முட்டிக்கொண்டும் சண்டை யிடுவதுமாய்ப் பலபேர் ஒரு கூட்டமாய் வீதிகளில் ஓடுகிறார்கள். இதனுடைய அபாயகுணம் என்னவெனில் இத்தகையோரை யுற்றுப்பார்ப்பவர் களுக்கும் அத்திருஷ்டி மாத்திரத்தாலேயே அந் நோய் வந்துவிடுகிறது. அவர்கள் அப்படியே சற்றுநேரம் பார்த்துக்கொண்டிருந்து, முகவிகார மடைந்து திடீலென்று அவர்களைப்போலவே கூவிக் கூத்தாடிக்கொண்டு அக்கும்பலில் போய் கலந்து கொள்கிறார்கள். இந்நோய் வருபவர்கள் அப்படியே கத்திக்கத்திக் குதித்து ஓய்ந்து போய் வாயில் நுரை தள்ளிக்கடைசியில் சவமாய் வீழ்ந்து விடுகிறார்கள். அந்தோ! இவர்களால் நடத்தப்படும் பெருங்கோரம் இது மட்டுமல்ல. இப்படிக்கூட்டமாகச் செல்வோர் நேராய் மயான பூமிக்குச் சென்று புதிதாய்ப்புதைக் கப்பட்ட சவங்களைக் குழியிலிருந்து நோண்டி யெடுத்து சின்னுபின்னமாய்ப் பிய்த்துத் தின்றும் விடுகிறார்கள்...'' என்றார்.

இதைக்கேட்டோர் திகிற் கொண்டோராய் அந்தோ கடவுளே! இந்த நோயின் பெயரென்ன வென்றார்கள். டாக்டர் 'எமக்கூத்து' என்றார். உடனே யாவரும் ஆண்ட வனைப்பிரார்த்திக்கத் தொடங்கினார்கள்.

19-வது அத்தியாயம்

துஷ்டகேதுவின் துஷ்டச்செயல்—குசலாம்பாளின் ஆபத்து—குசலாம்பாளும் துஷ்டகேதுவும்—வில்வநாதனும் பூபாலனும்—ஓர் மர்மம்.

அரண்மனையில் மேற்கண்ட சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கும் அதே மாலை சுமார் ஏழு மணிக்கு நீண்ட அங்கிகளையும் முகமூடிகளையும் அணிந்திருக்கும் மூன்று பேர் ஓர் கோயிலுக்கருகிலுள்ள நெருக்கமான பாதைவழியாய்ச் சென்றுகொண்டிருக்கிறார்கள். அந்தக்கோயிலுக்குத்தான் நமது ஆத்மநாதம் பிரபுவின் ஏகபுத்திரியாகிய குசலாம்பாள் தினம் சென்று கடவுளைப் பிரார்த்திப்பது. அவர்கள் மூவரும் கோயிலைச் சேர்ந்த மயானபூமியின் ஓரமாய் இருக்கும் சுவரினருகிற்சென்றதும் நின்றார்கள். மூவரில் தன் தலையணியில் ஒரு இறகை யணிந்திருந்த ஒருவன் மீதியிருவரில் ஒருவனை நோக்கி "கேசவா! நம்மிருவர் புரவிகளையும் கூட மாரியிடமே விட்டுவிட்டு நீ என் கூடவா" என்றான். கேசவன் "அப்படியே பிரபுவே" என்றான். நண்பர்களே! இப்போது அம்மூவரில் பிரபுவென்றழைக்கப் பட்டவன் யாரென்று கருதுகிறீர்கள். பரம அயோக்கியனாகிய துஷ்டகேது இராஜகுமாரனே.

துஷ்டகேது கேசவனை யழைத்துக்கொண்டு கோயிலில் சவங்கள் அடக்கம் செய்யப்படும் இடத்தின் வழியாய்ச்சென்று கோயிலில் யாவரும் பிரார்த்தனை செய்யுமிடத்திற்குச்செல்லும் வழியிலுள்ள வாயிற்படியருகில் கேசவனை யிருக்கும்படி கூறிவிட்டுத் தான்மட்டும் கோயி

லுக்குள் நுழைந்து சுமார் பத்து நிமிடங்கள் கழித்துக் கேசவனிடம் திரும்பி வந்து "ஆம். அக்கன்னிகை வந்திருக்கிருள். நீ சென்று மாரியிடம் கூறி, இருவரும் குதிரைகளைப்பிடித்துக்கொண்டு கோயிலின் வெளிவாயிலுக்கெதிரில் சற்று தூரத்தில் இருங்கள்" என்று கட்டளையிட்டான். கேசவன் அவ்வாறே சென்றதும் துஷ்டகேது கோயிலுக்குள் நுழைந்து அங்கிருந்த பிரம்மாண்டமான கம்பங்களின் மறைவில் நின்று குசலாம்பாள் மேல் கண்ணேக்கம் வைத்தபடி யிருந்தான்.

சுமார் அரைமணி நேரங்கழித்துக் குசலாம்பாளும் அவள் தோழிகளிருவரும் கோயிலிலிருந்து வெளிப்பட்டு தங்கள் வாசஸ்தலத்தை நோக்கி நடந்தார்கள். அவர்கள் அந்த நெருக்கமான வழியே சென்றுகொண்டிருக்கையில் திடீலென்று இரண்டு பேர் பின்னுலிருந்து வந்து குசலாம்பாளைப் பிடித்துக்கொண்டார்கள். அக்கன்னிகை வீறிட்டலறிக்கூவிஞள். இதை யறிந்த தோழிகளும் மிக்க திகிலடைந்து கூச்சலிட்டார்கள். ஆனல் இவர்கள் கூச்சலைக்கேட்ட பின்னுல் வரும் ஜனங்கள் என்னமோவென்று பயந்துகொண்டு ஓடி விட்டார்கள். குசலாம்பாள் ஒருமுறை கூச்சலிட்டதே அவளைப்பிடித்துக் கொண்ட துஷ்டகேது அவள் வாயைக் கரத்தால் மூடிக்கொண்டதால் அவள் மிக்க பயத்தால் மூர்ச்சையடைந்து விட்டாள். தோழிகள் திப்பிரமை நீங்கித்திரும்பிப்பார்த்த போது குசலாம்பாளையாவது அவளைப்பிடித்த ஆடவர்களையாவது காணக்கூடவில்லை. ஏனெனில் அச்சமயம் எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. அவர்கள் சென்ற வழியே அத்தோழிகளுக்குப் புலப்படவில்லை.

துஷ்டகேதுவும் அவன் இரண்டு ஆட்களும் துரிதமாய்த்தங்கள் புரவிகள் மேல் ஏறிக்கொண்டார்கள்.

துஷ்டகேது ஸ்மரணையற்று நிற்கும் குசலாம்பாளைக் குதிரைமேல் தன் முன் வைத்துக்கொண்டான். அவர்கள் துரிதமாய் நகர ஓரத்திலிருக்கும் துஷ்டகேதுவின் நாட்டு மாளிகையை நோக்கிச் சென்றார்கள். தோழிகள் தங்களால் கூடியவரையில் குசலாம்பாளைத் தேடிப்பார்த்தும் ஒரு உளவுமகப்படவில்லை. அவளைத் தூக்கிக்கொண்டு போனவர்கள் யாரென்று கிஞ்சித்தும் தெரியவில்லை.

துஷ்டகேதுவும் அவன் ஆட்களும் அரைமணி நேரத்தில் அவனுடைய நாட்டு மாளிகை போய்ச் சேர்ந்தார்கள். அங்கிருந்த ஒரு மூதாட்டி இவர்கள் வரவை யெதிர் பார்த்திருந்தவள் போல் வாயிற்படியண்டை வந்து யாவரையும் உள்ளே யழைத்துச் சென்றாள்.

குசலாம்பாள் ஸ்மரணை வந்து தன் கண்களை மெதுவாய்த்திறந்து பார்த்தாள். தான் இருக்கும் அறை நன்ராய் அலங்கரிக்கப்பட்டிருந்ததோடு அங்கிருந்த மேஜை நாற்காலிகள், ஸோபாக்கள் முதலியயாவும் விலையுயர்ந்தவைகளாகவிருந்தன. ஒரு வெள்ளித்தீபம் அங்கு எரிந்து கொண் டிருந்தது. முதலில் நாம் நமது அறையில்தான் இருக்கிறோமென்று கருதினாள். ஆனால் இரண்டொரு நிமிடங்களில் தான் கோயிலிலிருந்து வீட்டிற்குத் திரும்பிச்சென்றபோது பிடிக்கப்பட்டதும் மற்றவிஷயங்களும் அவள் நினைவிற்கு வந்தன. அவள் தன் அருகிலிருக்கும் அம்மூதாட்டியை நோக்கி "நான் எங்கே யிருக்கிறேன்?" என்று வினவினாள். அம்மூதாட்டி "சீமாட்டியே! நீ மிக்க கன்னியம்பொருந்திய துஷ்டகேது இராஜகுமாரரின் நாட்டு மாளிகையிலிருக்கிராய்" என்றாள்.

குசலாம்பாள் "அப்படியானால் அந்தப்பிரபுவா எனக்கு இத்தகைய அநீதகாரியத்தைச் செய்தார்? இல்லை

அப்படியிராது. ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது" என்ருள். அதே நிமிடம் துஷ்டகேதுவே நேராய் அறைக்குள் வந்ததும் "ஓ வனப்பில் இணையில்லாத கன்னிகாரத்தினமே. இதில் தவறு ஒன்றுமில்லை. நானே யுன்னை யிங்கு கொண்டு வந்தேன். இதற்கு ஒரு மனிதன் கூறக் கூடியசமாதானம் கூற ஆயத்தமாயிருக்கிறேன்." என்ருன்.

இவன் மொழிகளைக்கேட்ட குசலாம்பாள் மிக்க வெறுப்பும் கோபமுமடைந்து "ஓ பிரபுவே! நீர் என்ன அதிகாரத்தால் என் தாய் தந்தையரிடமிருந்து என்னைப் பிரித்து இம்மாதிரி துராக்கிரதமாய் இங்கு பிடித்து வந்து சிறையாக்கி யிருக்கிறீர்?" என்று கேட்டாள்.

துஷ்டகேது "ஓ சுந்தரமான கன்னிகையே! நான் இவ்வாறு செய்ததற்கு உன் இணையற்ற வனப்பின் மேலேயே நீ கோபித்துக் கொள்ள வேண்டும். என் மனநாட்டத்தை யடக்க என்னல் முடியாமற்போய்விட்டதால் நீ யென்னை யிதற்காக மன்னிக்கவேண்டும்." என்ருன்.

குசலாம்பாள் மிக்க கோபமடைந்து "ஓ பிரபுவே! நீ இப்போது எனக்குச்செய்த மிக்க அகௌரவமும் அநீதமுமாகிய துஷ்டச்செய்கையால் எனக்கு உம்மேல் மிக்க வெறுப்பும் கோபமுமே யுண்டாகின்றன. நீர் மரியாதையாய் என்னை யுடனே இந்த விடத்தை விட்டனுப்பி விட்டால் நான் என் பெற்ருேரிடம் கூட இதைக் கூருமல் உமது மரியாதையைக் காப்பாற்றுவேன்." என்ருள்.

துஷ்டகேது, "கன்னிகையே! இந்த ஒரு விஷயம் தவிர மற்ற எல்லாவற்றிலும் உன் கட்டளையே யெனக்கு வேதவாக்கியம். ஆனல் நீ துஷ்டகேதுச் சீமாட்டி யாகிற வரையில் நான் உன்னை விடமாட்டேன்" என்ருன்.

கன்னிகையோ "உமது அர்த்தமென்ன ? எனக்கு விளங்கவில்லை" என்றாள்.

துஷ்டகேது அவள் முன் முழங்காற்படியிட்டு "ஓ! கன்னிகையே! நான் என் உயிரினும் அதிகமாய் உன்னைக் காதலிக்கிறேன்" என்று அவள் வலக்கையைப் பற்றினான்.

கன்னிகை வெடுக்கென்று தன் கரத்தை யிழுத்துக் கொண்டு "ஓ கடவுளே!" என்று பாதி ஸ்மரணை யிழந்தவள் போல் பூமியில் சாய்ந்து விட்டாள். துஷ்டகேது தட்டென்றெழுந்து குனிந்து நின்று "ஓ அரிய கன்னிகையே! என் வார்த்தைகளும் உருவமும் உனக்கு அதிக வெறுப்பை யுண்டாக்குகின்றனவா... அல்லது... அல்லது...உன் காதல் வேறு யாருக்கேனும் அளிக்கப்பட்டு விட்டதோ?" என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதே குசலாம்பாள் முகத்தில் குபீலென்று இரத்தம் ஏறவும் இறங்கவும் தொடங்கியது. ஏனெனில் காதல் என்பது இத்தகைய உணர்ச்சியென்றும் தனக்குத்தான் கோயிலில் இரண்டுதரம் சந்தித்த அந்த வாலிபன்மேல் தோன்றியிருக்கும் இரக்கமும் அன்பும் காதலின் உணர்ச்சியேயென்றும் இதுகாறும் தெரியாது. இப்போதுதான் குபீலென்று இருளில் வெளிச்சம் உண்டானதுபோல் அவ்விஷயம் தோன்றியது.

அவள் முகக்குறிப்பைக்கண்ட துஷ்டகேது இந்த உண்மையை யுணர்ந்து "ஆ! எனக்கொரு போட்டிக்காரன் இருக்கிறான். அவன் என் எதிரில் வரும்பட்சத்தில் இப்போதே அவனை யென் வாளால் என் காலின் கீழ்ப் பிணமாய் வீழ்த்திவிடுவேன்" என்றான்.

ஒருபோதும் இத்தகைய பயங்கரமான மொழிகளைக் கேட்டிராத அக்கன்னிகை இவற்றைக் கேட்டதும் திடுக்கிட்டுப் பிரமிப்படைந்து தலைநிமிர்ந்து துஷ்டகேதுவின்

முகத்தைநோக்கியதும் அய்யோ கடவுளேயென்று அலறி மூர்ச்சையாய் விழ்ந்துவிட்டாள். அச்சமயம் அங்கிருந்த மூதாட்டி துஷ்டகேதுவை நோக்கி, "பிரபுவே! தாங்கள் மிக்க ஆத்திரத்தோடு பேசிவிட்டீர்கள். ஒன்றுமறியாத கன்னிகையிடத்தில் ஏககாலத்தில் இப்படி அவசரப்படலாகாது" என்றதே,

துஷ்டகேது "ஆம் ஆம். நான் ஆடவர் சபைக்கும் போர்முனைக்கும் தகுதியுடையவனே யன்றி மாதரை மயக்கும் வல்லமை யுடையவனல்ல என்றே யுணர்கிறேன். நான் செல்கிறேன். நீ இக்கன்னிகைக்கு நமது குடும்பச் சிறப்பையும், செல்வப்பெருக்கையும், மிக்க பழமையான கம்பீரம் கௌரவம் செல்வாக்கு முதலியவற்றையும் கூறி இவள் நாளைக்கு என்னைச் சாந்தமாகவும் பிரியத்தோடும் வரவேற்கும்படி செய்யவேண்டும். நாளை யிரவு சரியாய் எட்டுமணிக்கு என் மனமொத்த நண்பராகிய நகர குரு இங்கு வந்து எங்கள் இருவர்க்கும் திருமணச் சடங்கு நடத்துவார். அப்போது இவள் அத்தெய்வீகச் சடங்குக்குத் தக்க விதமாய்ப் பொறுமையோடும் சாந்தத்தோடும் பிரியத்தோடும் இருக்கவேண்டும், நான் காலையில் வருகிறேன்" என்றான்.

அம்மூதாட்டி "பிரபுவே! தாங்கள் எள்ளளவும் அய்யப்படவேண்டாம். நான் தக்கப்படி இவளைச் சரிப்படுத்திவிடுகிறேன்" என்றாள். அதன் பின் துஷ்டகேது அதை விட்டுத் தன் நகரமாளிகையை நோக்கிச்சென்றான்.

அவன் சென்றபின் சற்று நேரங்கழித்துக் குசலாம்பாள் மெதுவாய்க்கண்களைத்திறந்து பார்த்து அத்துஷ்டன் இல்லை யென்றுணர்ந்து, மெதுவாய் எழுந்து உட்கார்ந்தாள். மூதாட்டி அவளை நோக்கித் துஷ்டகேதுவின்

குடும்பகௌரவத்தையும், செல்வத்தையும், வீரத்தன்மையையும் வெகுவாய்ப் புகழ்ந்து நெடுநேரம் பிரசங்கித்தாள். கன்னிகையின் சிந்தனை அவள் பெற்ருேர் மேலும் தான் கண்டவாலிபன் மேலுமே யிருந்தது. ஆகையால் பார்வைக்கு அம்மூதாட்டி கூறுவதையே அக்கரையோடு கேட்பவள் போல் தோன்றினும் உண்மையில் அவள் கூறிய விஷயம் கன்னிகையின் செவியில் ஏறவேயில்லை.

மூதாட்டி "நாம் கூறிய யாவும் இவள் மனதில் நன்ருய்ப்பதிந்து விட்டன" என்று திருப்தி யடைந்து, எழுந்துபோய் நல்ல உயர்தரமான ஆகாரவகைகளும் விலையுயர்ந்த திராக்ஷ ரசபானமும் கொண்டுவந்து வட்டித்துக் கன்னிகையைப் புசிக்கும்படி கூறிச்சென்ருள்.

கன்னிகை யிருக்கு மறைக்குள் இன்னெரு அறை யிருந்தது. அது படுக்கையறை. மூதாட்டி சென்றபோது வெளிக்கதவைப் பூட்டிக்கொண்டு சென்ருள். கன்னிகை அவள் சென்றதே எழுந்து உள் அறைக்குச்சென்று நோக்கினுள். அந்த அறையில் ஒரு சாளரம் இருந்தது. அதைத்திறந்து பார்த்தாள். அந்த அறை அவ்வீட்டின் பின்பக்கத்தோட்டத்தின் ஓரத்திலிருந்தது. இருள் சூழ்ந்திருந்ததால் அங்கு தோட்டமும் சற்று தூரத்தில் சுவரும் இருப்பது மட்டுமே கன்னிகையின் கண்களுக்குப் புலப்பட்டன. ஆனல் சாளரம் கீழிருந்து மிக்க உயரத்திலிருக்கிறதென்று மட்டும் தெரிந்தது.

குசலாம்பாள் என்றும் தன் தாய் தந்தையரை விட்டுப் பிரிந்தறியாதவள். அதோடு உலகில் நடக்கும் அக்கிரமங்கள் இப்படிப்பட்டவையென்று அவள் சற்றுமறியாள். மேலும் துஷ்டகேது தன்னை மனைவியா யளிக்கும்படி தன் தகப்பனைக்கேட்ட சங்கதியும் அதற்குத் தன் தந்தை மறுத்துக் கூறியதும் அவளுக்குத் தெரியாது. ஆகை

யால் அவன் தனக்குச் செய்ததீங்கு மிக்க அக்கிரமமான தென்றும் மன்னிக்கத் தக்கதல்லவென்றும் கருதிக் கொண்டு அவன்மேல் மிக்க வெறுப்படைந்தாள். அவளுடைய துயரம் இத்தகையதெனக் கூறமுடியாது. அவன் கூறிய விஷயங்களால் அவன் துராக்கிரதமாய்த் தன்னைப் பிடித்து வந்து அங்கு சிறை வைத்திருப்பது பலவந்தமாய்த் தன்னை மணம்புரிந்து கொள்வதற்கென்று அவளுக்கு நன்ருய்ப் புலப்பட்டது.

இத்தகைய அயோக்கியனுக்கு மனைவியாவதைவிட எவ்வகையாலேனும் நமது பிராணனைப் போக்கிக்கொள்வதே உத்தமம் என்று தீர்மானித்துக்கொண்டாள். அங்கு வைக்கப்பட்டிருந்த ஆகாரத்தை யவள் தொடவேயில்லை. நெடுநேரம் மிக்க துயரமான சிந்தனையிலிருந்து பிறகு கடவுளைப் பிரார்த்தித்தாள். நிரபராதியாகிய நம்மை யாண்டவர் எவ்வாற்ருலும் இந்த ஆபத்தினின்றும் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையோடு நித்திரைபோய்விட்டாள். அவளுடைய தலையணை கண்ணீரால் நனைக்கப்பட்டதென்று நாம் கூறவேண்டுவது அனுவசியம்.

மறுநாள் அதிகாலையில் நமது வில்வநாதன் நகரவோரத்திலுள்ள வெளிப்பிரதேசத்தில் ஒரு இராஜபாட்டையில் மெதுவாய்ச் சென்றுகொண்டே யிருக்கிருன். அவன் வழக்கம்போல் நாணயமான உடையணிந்து கொண்டிருக்கிருன். ஆனல் இடுப்பில்மட்டும் வழக்கமாயிருக்கும் குத்துவாளோடு மாயசிங்கன் கொடுத்த பொற்குழலும் தொங்கிக்கொண்டிருக்கிறது. அவன் அந்த விசாலமான செப்பனிட்ட பாதையில் சென்றுகொண்டிருந்த போது எதிரில் ஒரு வாலிபன் குதிரைமேல் துரிதமாக வருவதைக்கண்டு விலகிநின்ருன். அவன் அருகில் வந்ததும் குதிரையைத் தட்டென்று நிறுத்தி. "ஆ! வில்வநா

தம்! உன்னைச் சந்தித்ததால் மிக்க சந்தோஷமடைகிறேன். ஆம் மெய்யாகவே எவ்வளவோ சந்தோஷம்" என்ருன். அவ்வாலிபன் மாயசிங்கனிடமிருக்கும் பூபாலனே. வில்வநாதன் "என்னைக்கண்டதால் உனக்கு இவ்வளவு சந்தோஷம் என் உண்டாயிற்று?" என்ருன்.

பூபாலன்:—"ஆ! ஏன்? நீ நல்ல தைரியசாலியாகிய வீரன். மிக்க பெருந்தன்மை வாய்ந்தவன். உதாரகுணமுடைய சத்தியவான். பரிசுத்தமான உள்ளமுடையவன்" என்ருன்.

வில்வநாதன்:—"நீ கூறும் அவ்வளவு புகழ்ச்சிக்கு நான் பாத்திரவானல்ல. ஆயினும் என்னைப்பற்றி இவ்வளவு உனக்கெப்படித் தெரியும்?" என்ருன். பூபாலன் "மாயசிங்கன் நீ வந்துவிட்டபின் அங்கு நடந்த சங்கதி யாவும் எங்களுக்குக் கூறினர். உன்னைக் கொல்லத் துணிந்தவர்களுக்காகவே நீ கடவுளைப் பிரார்த்தித்ததும், மாயசிங்கனுக்காக எவ்வளவோ உருக்கமாய்த் தோத்திரம் செய்ததும், பிறகு துஷ்டகேதுவோடு சண்டை செய்ததும் ஆகிய எல்லா விஷயங்களையும் கூறினர். உன் குணங்களை யவர் எவ்வளவோ புகழ்ந்துகொள்கிருர்" என்ருன். வில்வநாதன் "மாயசிங்கனே எவ்வளவோ பெருந்தன்மையும் உதாரகுணமு முடையவன்" என்ருன். இதைக் கேட்டதே பூபாலன் சட்டென்று சற்று முகவாட்டமடைந்து, "ஆ! அதுதான் என் மனதை வாதிக்கிறது. ஒவ்வொருவேளை பைத்தியம் பிடித்துவிடும்போலிருக்கிறது" என்று மெதுவாய்க் கூறியதும், வாய்ப்பதற்றத்தால் கூறத்தகாததைக் கூறிவிட்டவன்போல் தட்டென்று வாய் மூடிக்கொண்டு கலவரமடைந்து நின்ருன். வில்வநாதன் "அவன் தனக்குக் கூறப் பிரியமில்லாத எதையோ அவ

சரத்தால் வெளியிட்டுவிட்டான். ஆகையால் நாம் அதைப் பற்றிக் கேட்கலாகாது'' என்று வியப்போடு அவனை நோக்கினன்.

பூபாலன் "நண்பரே! நான் கூறக்கருதாததைக் கூறத் தொடங்கினேன். ஆ! நான் மிக்க வியாகூலத்தோடிருக்கிறேன். ஆம். மிக்க வியாகூலத்தோடிருக்கிறேன்'' என்ருன். வில்வநாதன் அந்தோ உனக்கும் வியாகூலமிருக்கிறதோ? என்ருன். பூபாலன் "ஆனல் அது நானே யுண்டாக்கிக்கொண்டது நான் மிக்க பெருந்தன்மையும் உதார குணமுமுடைய எஜமானிடம் வேலைசெய்கிறேன்...'' என்றதே, வில்வநாதன் "ஒகோ மாயசிங்கனுடைய தொழில் உனக்கு மிக்க அகௌரவமானதாய்ப் புலப்படுகிறதாக்கும்'' என்ருன்.

பூபாலன் "அந்தோ! இல்லையில்லை. அத்தகைய நோக்கமுடையவனென்ற கௌரவம் எனக்குத்தகாது. நான் செய்யும் தொழிலை நோக்க மாயசிங்கன் தொழில் எவ்வளவோ கௌரவமானதே. இப்போது நான் அதிக மாய்க்கூறச் சமயமில்லை. நாளை இரவு சரியாய் ஒன்பது மணிக்கு இராஜமாளிகைக்கெதிரில் வீதியின் முனையில் இருக்கும் ஜலக்குழா யருகில் தயவு செய்து வந்திருந்தால் நான் கட்டாயம் அங்கு வருகிறேன். அப்போது அதிகமான சமாசாரம் கூறுகிறேன். உன்மேல் பூரணமான புத்திரவாஞ்சை வைத்திருக்கும் பெருந்தன்மையான மனிதனுக்கு நீ மிக்க உதவி செய்யலாகும்.'' என்று கூறியதும், அவன் வந்தனமளிப்பதை யேற்றுக்கொள்ளக் கூட நிற்காமல் போய் விட்டான்.

வில்வநாதன் திகைத்துப்போய் அங்கேயே நின்று விட்டான். "ஆ! அவன் மனதில் வியாகூலமிருக்கிறது. அவ்வளவு அழகிய வாலிபன் அகௌரவமான குற்றத்

தைச் செய்திருப்பானு? அவன் வார்த்தைகளால் அவன் ஏதோ இழிவான காரியத்தைச் செய்து விட்டவ னென்றே தெரிகிறது. நம்மேல் புத்திரவாஞ்சை யுடைய வன் யார்? மாயசிங்கனுகத்தான் இருக்கவேண்டும். இப் போது நாம் சிந்திப்பதில் யாதும் பயனில்லை. எல்லாம் நாளை யிரவு ஒன்பது மணிக்குத்தெரிந்து விடும்'' என்று தனக்குத்தானே சிந்தித்துக்கொண்டு செல்லும்போது ஒரு மேட்டின் மேலேறினுன்.

20-வது அத்தியாயம்.

வில்வநாதனுக்கும் துஷ்டகேதுவுக்கும் இரண்டாம் முறை வாட்போர்—குசலாம்பாள் சிறையிலிருந்து மீட்கப்படல்—ஊதுகுழலின் அருமை—எமக்கூத்தின் கோரக்காட்சி—வில்வநாதனும் குசலாம்பளும் துயரமாய்ப்பிரிதல்.

186489

அம்மேட்டிலிருந்து பார்க்கும்போது அம்மேட் டின் அடிவாரத்தில் அழகான ஒரு நாட்டு மாளி கை தோன்றியது. அம்மாளிகையைச் சுற்றிலும் அழகிய ஒரு தோட்டமிருந்தது. வில்வநாதன் செல்லும் இராஜ பாட்டை அம்மாளிகையின் சுற்று மதில் சுவரின் ஓரத்தில் செல்கிறது. அவன் அப்பாதை வழியே அம்மாளிகையி னருகில் சென்றபோது தலைநிமிர்ந்து பார்த்ததும் மிக்க ஆச்சரியத்தோடு உற்றுநோக்கினன். ஏனெனில் அம் மாளிகையின் மேல் மாடியிலிருந்து ஒரு சாளரத்தின் கதவு திடீலென்று திறக்கப்பட்டதும், ஒரு கன்னிகை அங்கு நின்றுகொண்டு ஒரு சிறு குட்டையால் சமிக்கை

சென்னை-600 005

மின் சார மாயவன்.

ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்டது.

இது ஓர் மிக்க அபூர்வமான கள்ளன் சரித்திரம். கதாநாயக
ஞகிய மின்சாரமாயவன் என்னும் கள்ளன் கல்வியும், புத்திசாமர்த்
ியமும், தீரமும் உடையவன். ஆதலால் அவன்செய்கைகள் ஒவ்
வொன்றும் மிக்க பிரமிப்பை யுண்டாக்கத்தக்கதா யிருக்கும்.
வன் ஆபத்தில் சிக்கிக்கொள்ளும் ஒவ்வொரு சமயமும் தப்பு
ன் என்று ஒருவரும் கருதார்கள். இது அறிவாளிகளுக்கும்
்க விருப்பத்தையும், உலக அனுபவம்பெற அறிந்து கொள்ள
ண்டிய பல விஷயங்களையும் அளிக்கக்கூடியது. ஆதிமுதல்
ந்தம் வரை மனதைக் கவர்ந்து கொள்ளத்தக்கது. பெண்களைக்
ட்டில் வையாது ஆண்பிள்ளைகளை விடுவதுபோல் விட்டு விடுவ
ால் நேரிடும் விபரீதங்களை இதில் அனுபவமாய்க் காணலாம்.
ல்ல கடிதத்தில் சுத்தமாய்ப் பதிப்பிக்கப்பட்டது. சுமார் 350
க்கங்களுக்குமே லுடையது.

விலை ரூபா 1—8—0.

புது ! துப்பறியும் !! நாவல் !!!

வெளியாய் விட்டது.

மஞ்சள் அறையின் மர்மம்

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால்வரையப்பட்டது.

இதுகாறும் அவரால் வரையப்பட்ட அனேகம் துப்பறியும்
நாவல்களையும், இதர துப்பறியும் நாவல்களையும் வாசித்திருப்போர்
இத்தகைய மிக்க ஆச்சரியமும் சாமர்த்தியமுமான துப்பறியும்
நாவல் இதுகாறும் எழுதப்படவில்லை யென்று எளிதில் உணர்
வார்கள். இதில் குற்றம் செய்தவனுடைய சாமர்த்தியச்செயல்
களும், குற்றத்தைக் கண்டு பிடிப்பவனுடைய சாமர்த்தியச்செயல்
களும் ஒன்றுக்கொன்று இணையற்றனவாகவே யிருக்கும். குற்றம்
டந்த இடத்தின் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. காகித
விலையால் சொல்ப பிரதிகளே அச்சிடப்பட்டன. விலை ரூ. 1 8 0

தபால் கூலி பிரத்யேகம்.

விலாசம்:— ஆனந்தபோதினி ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி,
சௌகார்பேட்டை, மதராஸ்

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ளூ ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமி களுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதி களும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-௱-௱-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் எழுதப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரையுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரி காப்பி வேண்டுவோர் 1 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூ.	அ.
இரத்தினபுரி இரகசியம்			தினகரசுந்தரி	ரூபா 1	0
2-பாகமும்	... 4	0	பத்மாஸனி	... 0	14
கற்கோட்டை	... 2	0	வீரநாதன்	... 0	12
மின்சார மாயவன்	... 1	8	குணசுந்தரன்	... 0	12
தேவசுந்தரி	... 1	4	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
கனகபூஷணம் 2-பாகமும்	... 3	8	கமலசேகரன்	... 1	12
சுவர்ணாம்பாள்	... 0	12	பூங்கோதை	... 0	10
ஆனந்தவிங்	... 2	0	இந்திராபாய்	... 2	8
மதனபூஷணம்	... 1	0	அமராவதி 2 பாகமும்	4	0
ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸருடைய சரித்திர உபதேசங்கள்	1	12	சகோதரவாஞ்சை	0	6
			ஹை ஸ்கூல் பதிப்பு ...	0	7

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ், நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Power Press, Madras.